ஆசிரியர்:
மு.கருணாநிதி

முரசொலி

-வார இதழ்-

முரசு 4 | 14—8—58 | வெள்ளி | ஒலி 44

விழுதுகள் பல விட்டு, செழித்தோங்கி வளர்ந்திருக்கும் தி. மு. க. என்ற ஆலமரத்தின் விதையை ஆராய்கிறார்,
நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம்!

கற்பனை உரையாடல்

பட்ஜட் விவாதம்

சபாநாயகர் :சுப்புத் தாத்தா

வீட்டின் நிதி மந்திரி : எழுத்தாளன் 'மணியோசை'

எதிர்க் கட்சித் தலைவி : மணி நாயகி (மணியோசையின் மனைவி)

சட்ட மன்ற உறுப்பினர்கள் :

ஆளுங்கட்சி : மணியோசையின் அன்புக்குப் பாத்திரமான மக்களான மின்னொளி, சனார்த்தனன்...முதலானோர்.

எதிர்க் கட்சி : தன் தந்தையை எதிர்க்கும் மனோன்மணி, கலைபொளி, பண்டரிநாதன், கல்லூரி மாணவன் கண்மணி (கொறடா) முதலானோர்.

பார்வையாளர்: நாட்டின் நிதி மந்திரி, அவரது மனைவியார் முதலானோர்......

மணியோசை: அவைத் தலைவர் அவர்களே! சட்ட மன்ற உறுப்பினர்களே!.........நமது நெருங்கிய உறவினருக்கு நண்பர் என்ற முறையில் நம் நாட்டின் நிதி மந்திரியே நம்முடைய பட்ஜெட் விவாதத்தைக் கேட்டு மகிழ வந்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஒரு 'எழுத்தாளன்' என்ற முறையிலே அவரைப் பலமுறை தாக்கி எழுதியிருந்தாலும், அவர் அதையெல்லாம் பொருட்படுத்தாது, இந்த ஏழையின் வீட்டிற்குத் தன் குடும்ப சகிதமாக வந்துள்ள நேரத்திலே இந்தக் குட்டி பட்ஜெட்டை சமர்ப்பிப்பது குறித்து பேருவகை கொள்கிறேன்!

ஆனால் நாட்டின் பட்ஜெட்டைத் தயாரிப்பதைவிட வீட்டின் பட்ஜெட்டைத் தயாரிப்பது மிகவும் கடினமானதென்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்ஜெட் தயாரிப்பதிலே உள்ளக் கவனக் குறைவு நிதி மந்திரியை சிறிதும் பாதிக்காது! ஆனால் நிதி மந்திரி செய்யும் சிறு தவறுக்கெல்லாம் அவதிப்படுபவர்கள் இந்த நாட்டு ஏழை மக்கள்தான்!

ஆனால் வீட்டு பட்ஜெட்டை உருவாக்கும் இந்த நாட்டின் அப்பாவி கணவன்மார்கள் சிறு தவறு செய்தாலும், அந்தத் தவறு அவர்களையே பாதிக்கும். எனவேதான் பொறுப்பற்ற-வீண் ஆடம்பரப்பிரியைகளான மனைவிகள் தயாரிக்கும் பட்ஜெட்டைப்போல், நாட்டின் பட்ஜெட்டைத் தயாரிக்காமல், பொறுப்புள்ள கணவன்போல் பட்ஜெட்டை நிதி மந்திரிகள் தயாரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு பத்திரிக்கைகள் மூலம் மாதம் முப்பது ரூபாய் வருமென்று நான் தப்புக் கணக்குப்போட்டுவிட்டேன்! ஆனால் ஒரு பத்திரிக்கைக்காரர், "உன் கட்டுரைகளுக்குக் கூலி வேறு கேட்கிறீரோ?..." என்று கேட்பாரென நான் கனவில்கூட நினைக்கவில்லை! எனவே இன்று நான் பெரியதொரு கடன்காரனாக வாழ்கிறேன். காகிதக் கடைக்காரனுக்கு 30 ரூபாய் கடன் கொடுக்க வேண்டும்! பேனாவிற்கு இங்க் வாங்கிய வகையில் ரூ. 6 கடன் கொடுக்க வேண்டும்! தபால் தலைகள் வாங்குவதற்காகக் கடன் வாங்கிய வகையில் 50 ரூபாய் பாக்கி அப்படியே நிற்கிறது! இதை அன்னியில் மொத்தக் கடனாக ஐயாயிரம் ரூபாய் வேறு கொடுக்க வேண்டும்! அதற்கு இது வரையில் வட்டியே ஆயிரத்துக்குமேல் தாண்டி விட்டது!

ஐயோகோ !.......எல்லாவற்றையும்விட நமது கண்மணியின் விஷயம் என் கண்களிலே கண்ணீரை வரவழைக்கிறது.

சர்க்காரின் உதவிச் சம்பளம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் அவனைக் கல்லூரியில் சேர்த்தேன்! டெல்லி சர்க்கார், சென்னை சர்க்காரிடம் வாங்கிக் கொள்ளும்படி உத்தரவு அனுப்பிவிட்டது! ஆனால் சென்னை சர்க்காரின் பட்டியலிலே இவனது கல்லூரியின் பெயர் இடம் பெறவில்லையாம்! அவனுக்காக ஒரு முதலாளியின் காலில் விழுந்து, அவர் மகனுக்கு என் பெண்ணையும் கொடுத்து ரூ. 1500 கடன் வாங்கினேன்! ஒரு ஆண்டிற்கு ஆயிரத்தி ஐநூறு ரூபாய் கடன்! இன்னும் மூன்றாண்டுகள் அவன் படித்து முடிக்க முடியுமா? என் கண்மணியே! உன் தங்கையின் கையைப் பிடித்த அந்த முதலாளி மகன்தான் உன்னுடைய கண்ணீர்த்துளிகளைத் துடைக்க வேண்டும்!

எனவே இந்த வீட்டின் சட்ட மன்ற உறுப்பினர்களே! என்னுடைய கிழிந்த சட்டையும், வேட்டியும், நரைத்துப் போன தலையும், குழி விழுந்த கண்களும், தளர்ந்தாடும் கைகளுமே நான் இந்த வீட்டின் முன்னேற்றத்துக்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குச் சான்றுகளாகும்! இப்பொழுது என் பேனாவின் நிப்பிலே முனை மழுங்கிவிட்டது! பேனாவிலே இங்க் ஊற்றினால் ஒழுக ஆரம்பிக்கிறது! உண்மையைக் கூறினால் இப்பொழுது என் பேனாவிலே இங்க்கூட இல்லை! ஆகவே இனிமேல் எவ்வளவு நாளைக்கு இந்த வீட்டின் காலச் சக்கரம் ஓடுமென்பதே இன்றைய என் பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையாகும்!

நான் தளர்ந்துவிட்டதினால்— என்மீது எனக்கே நம்பிக்கை இல்லாததினால்—இந்த வீட்டின் விவகாரங்களை இனிமேல் எதிர்க் கட்சித் தலைவியாகிய (என்னுடைய மனைவிதான்......!) திருமதி மணிநாயகியிடத்திலும், எதிர்க் கட்சிக் கொறடாவான கண்மணியிடத்திலும் விட்டு விடலாமென நினைத்தேன்!... ஆனால் இந்த வீடு சீரழிந்த நிலையில் உள்ள இந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை கைவிடுவது அவ்வளவு நல்லதல்ல! எனவே இன்னும் மூன்றாண்டு கழித்து — கண்மணி பட்டமும் அனுபவமும் பெற்றுத் திரும்பியவுடன் எல்லாப் பொறுப்பையும் அவனிடமே விட்டுவிடலாமென நினைக்கிறேன்!

மேலும் நாட்டின் நிதி மந்திரி வந்திருக்கும் இந்த நேரத்தில் இந்த வீட்டின் நிதி மந்திரியாகிய நான் உள்ளத்தில் உள்ளதை ஒளிவு மறைவின்றி உரைத்திட விரும்புகிறேன். மதிப்புமிக்க மந்திரி அவர்களே! நீங்கள் தயாரித்த நாட்டுப் பட்ஜெட் எங்கள் வீட்டையும், மற்ற ஏழைகள் வீடுகளையும் பெரிதும் பாதிக்கிறது! "புது வரிகள் விதிக்கவில்லையே!" எனக் கூறலாம். முன்பு உள்ள வரிகளே எங்களை மூச்சு திணறும்படிச் செய்து கொன்றுவிடும் நிலையில் உள்ளது! "உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி" என்று ஒரு பழமொழி உண்டு! அதன்படி, இரண்டு பக்கமும் இடிபடும் மத்தளமாகத்தான் இன்றைய மக்கள் மனம் வருந்தியபடி மடிகிறார்கள்! டெல்லி சர்க்கார் போடும் வரி ஒரு புறம் தாக்குகிறது! மாநில சர்க்கார் போடும் வரி மற்றொரு புறம் மோதுகிறது! இரண்டிற்குமிடையிலே சிக்கி இன்னலுறும் இந்த ஏழை மக்களுக்கு இன்ப வாழ்வு என்றுதான் கிட்டுமோ?

எனவேதான் சட்ட மன்ற உறுப்பினர்களே! என்னால் பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் உங்களுக்குக் காட்ட முடிகிறது! இந்த நன்றிகெட்ட தமிழகத்தில் பிறக்காமல், எழுத்தாளர்களைப் போற்றி வளர்க்கும் மேனாட்டில் நான் பிறந்திருந்தால், சர் வால்டர் ஸ்காட்டைப்போல பெரும் பொருளைக் குவித்துக்காட்டியிருக்க இயலும்!... ஆனால் கோடிக் கணக்கான ரூபாய்களைத் தன் எழுத்து மூலம் சம்பாதித்த அந்த ஸ்காட்டே சில பிரசுரகர்த்தாக்கள் செய்த மோசடியினால் தன் கடைசி காலத்தில் வறுமையால் வாடினாரென்றால், இந்தக் குட்டி எழுத்தாளன் எம் மாத்திரம்?

திசை எட்டும் புகழ் பரப்பும்
தீந்தமிழ்க் கருவூலம்!

முத்தாரம்

மார்ச் இதழ்....
இப்போது விற்பனையாகிறது!

வீட்டு மன்ற உறுப்பினர்களே! மத்திய சர்க்காரின் பட்ஜெட் மாநில சர்க்காரின் பட்ஜெட்டைப் பெரிதும் பாதிப்பது போலவே மாநில சர்க்காரின் பட்ஜெட், நம் வீட்டு பட்ஜெட்டைப் பெரிதும் பாதிக்கிறது! மாநில சர்க்கார், டெல்லியின் கைப்பொம்மையாக ஆட வேண்டியிருக்கிறது! ஆனால் நாமோ இரண்டு சர்க்காரின் கைப்பொம்மைகளாக ஆட வேண்டியவர்களாக இருக்கிறோம்!

விலைவாசிகள்... முன்னைவிட மேலும் உயர்ந்துகொண்டே போகிறது! ஒரு குயர் ஆறணா விற்ற வெள்ளைக்காகிதம் இப்போழுது எட்டணா விற்கிறது! அதேபோல் நல்ல பேனா இங்கின் விலையும் உயர்ந்து விட்டது! ஒரு கதை அனுப்புவதற்கு முன்பு ஓரணாதான் செலவாகும்! ஆனால் ஐயகோ; இப்பொழுது ஏழை எழுத்தாளன் ஒரு சிறு கட்டுரை அனுப்ப வேண்டுமென்றாலும் குறைந்தது எட்டு புதுக் காசுகள் செலவழிக்க வேண்டியிருக்கிறது! பத்திரிக்கை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமென்றால் பதினைந்து புதுக்காசுகள் ஒரு கவருக்குக் கொட்டிவிட்டு ஒப்பாரி வைத்து அழவேண்டியிருக்கிறது! பத்திரிக்கை அலுவலகத்திற்கே நேரில் சென்று வருவோமென்றால் இரயில், பஸ் கட்டணங்கள் வேறு உயர்ந்து விட்டன! மேலும் டீஸல் எண்ணையின் வரி உயர்வினால் பஸ் கட்டணங்கள் மேலும் உயருமென்று நினைக்கிறேன்! முன்பெல்லாம் சினிமாவுக்கு சென்று அதைப்பற்றிய விமரிசனங்களை எழுதி அனுப்புவதுண்டு! இப்பொழுது சினிமாவுக்கும் வரி விதித்து விட்டார்கள்! சினிமா டிக்கட் விலையும் அதிகரிக்குமாம்! எனவே இனிமேல் இந்த வீட்டிலிருந்து யாரும் சினிமாவுக்குப் போகக் கூடாதெனத் தீர்மானித்து விட்டேன்.

கலையொளி: அநியாயம்! அக்கிரமம்! கலையை ரசிக்க இயலாமல் இந்த வீடாகிய இருள் சூழ்ந்த காட்டில் வாழ்வதா? இனி மாள்வதா?...

சுப்புத் தாத்தா: ஆர்டர்!...' அமைதி!... தங்களுக்கு இந்தப் பட்ஜெட்மீது பேச வாய்ப்பு கிடைக்கும்போது பேசலாம்! இப்பொழுது உட்காருங்கள்!...

மணியோசை: நான் யார்மீது வரி போடமுடியும்? இந்த வீட்டில் என்னைத்தவிர யாராவது ஒரு நயா பைசாவாவது சம்பாதிக்கிறார்களா?... எல்லோரும் செலவினங்கள்தான்! வருவாயினத்தையே காணோம்!... எனவே வரி போடுவதற்குப் பதிலாகச் "செலவுக் குறைப்புத்" திட்டத்தைக் கொண்டுவந்துள்ளேன்! இனிமேல் மணிநாயகிக்கு ஆண்டுக்கு ஒரே ஒரு கைத்தறி புடவைதான்! மற்றொரு கைத்தறி புடவையெடுத்து மற்ற பெண்களுக்கு வேண்டியவைகளைத் தைத்துக் கொள்ள வேண்டியது! காடா மல் துணி எடுத்து மற்ற உறுப்பினர்களுக்கு சட்டை, வேஷ்டி தயாரித்துக் கொள்ள வேண்டியது! இனிமேல் அரிசிக்கு பதில் எல்லோ

[தொடர்ச்சி பக்கம்—8]

வெள்ளி 14-3-58 சென்னை

இன வெறி!

இனப்பற்று

இனவெறி

—இந்த இரு வார்த்தைகளுக்குமுள்ள பொருள் 'சிக்கனம்' என்பதற்கும் 'கருமித்தனம்' என்பதற்கும் உள்ள பேதத்தைக் கொண்டது.

"தென்னகத்தில் வாழும் திராவிடர்களாகிய நாம் ஒரு தனி தேசிய இனம்; அந்த இனம் அடிமை வாழ்வு அகற்றி சுயேட்சையாக வாழ்வதற்கு ஒரு தனி நாடு வேண்டும்."

—இந்தக் கோரிக்கை இனம் வாழ வேண்டும் என்கிற இனப்பற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்!

"வெள்ளையர்கள்தான் இங்கு சுதந்திரத்துடன் வாழ உரிமையுண்டு; கருப்பர்கள அவர்களைத் தீண்டககூடாது; சரி சமமாக இருக்கக்கூடாது; அவர்கள் ஒதுங்கியே இருக்க வேண்டும்."

—தென்னுப்பிரிக்காவிலே நிலவி வரும் இந்தக் கொள்கை இனப்பற்றை அல்ல; இனவெறியை அடிப்படையாகக் கொண்டதாகும்!

இப்போது இலங்கையிலே சிங்களவர்களிடையே வேரூன்றி வளர்ந்து வருவது இனப்பற்றல்ல; கடைந் தெடுத்த காட்டுமிராண்டித்தனமான இனவெறி என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுவும் சமீப காலமாக சிங்கள வெறியர்கள் எதிரிகளாகக் கருதிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் நிலை முன்பு இருந்ததைவிட எள்ளளவும் முன்னேறியிருப்பதாகத் தெரியவில்லை.

அண்மையில் 'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியார்' கூட்டிய மாநாடானது சிங்கள வெறி எவ்வளவு கொடிய உச்சக் கட்டத்தை எட்டியிருக்கிறது என்பதைத்தான் தெள்ளத் தெளியச் சுட்டிக் காட்டுகிறது.

அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட ஒருவர் 'இலங்கையில் கள்ளத்தனமாகக் குடியேறுகிறவர்களைக் கண்ட மாத்திரத்தில் சுட்டுத் தள்ள வேண்டும்' என்று அடலேறைப்போல முழங்கி இருக்கிறார்.

—இருந்தாலும் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதமர் இந்த பலாத்கார வாடையைக் கண்டித்திருந்தும்கூட அவரது பேச்சிலே தூய்மையான உள்ளத்தோடு அவரது அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முயற்சிக்கிறது—என்பதற்கான அறிகுறிகளைக் காணோம்.

அந்த மாநாட்டிலே இலங்கையிலேயுள்ள தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்பதான கருத்தையும் பலர் வலியுறுத்தியிருக்கின்றனர்.

அதற்குப் பதில் சொல்லும்போது பண்டார நாயகா தேசிய மயமாக்குவதால் உண்டாகின்ற நன்மை தீமைகளைப் பற்றிப் பேசாமல்; அது எந்த விதத்தில் இலங்கை வாழ் தமிழர்களுக்கு நன்மையைத் தேடித் தரும் என்பதைத்தான் அவர் விளக்கியிருக்கிறார்!

அங்குள்ள தேயிலைத் தோட்டங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டால்; தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம்தான் வேலைப் பாதுகாப்பு செய்து தர வேண்டும்.

தேயிலைத் தோட்டங்களில் இரத்தத்தை வியர்வைக் குளமாக்கி வேலை செய்பவர்களோ, தமிழர்கள்!

ஆக தேயிலைத் தோட்டங்களைத் தேசியமாக்குவது தமிழர்களுக்கு 'வரப் பிரசாதமாக' அமைந்துவிடும்.

—பண்டார நாயகா இப்படி அறிவுரை கொடுத்திருக்கிறார்!

பண்டா பதவிக்கு வருவாரேயானால் இலங்கைத் தமிழரின் குடியுரிமைப் பிரச்சினை நல்ல முறையிலே தீர்ந்துவிடும்—என்று எதிர்பார்த்தவர்களுக்கு இது மேலும் ஒரு பேரிடியாகத்தான் இருக்கிறது.

'அன்போடு கொல்லு'—என்று சொல்லுவார்கள். பண்டார நாயகாவின் உபதேசமும் இந்த விதத்திலேதான் அமைந்திருக்கிறது.

"பார்த்த மாத்திரத்தில் சுட்டுக் கொல்ல வேண்டும்" என்று கூறுவது கேட்பதற்குக் காரமாக இருக்கிறது. எனவே செய்வதைச் சொல்லாமல் செய்வதுதான் நாகரிகமான முறை—என்று சுட்டிக் காட்டுவது போலத்தான் சமீப காலமாக பண்டார நாயகாவின் பேச்சு ஜாடை காட்டுவதாக இருக்கிறது.

இனவெறி வென்றதாக உலகச் சரித்திரத்தில் ஆதாரமே இல்லை! இதை உணர்ந்தாவது சிங்கள வெறியர்களைக் கட்டுப்படுத்தி; அதைப் பண்புள்ள இனப் பற்றாக அவர் மாற்ற வேண்டுமென்கிற லட்சோப லட்சம் இலங்கைத் தமிழரின் ஒருமித்த எண்ணத்தைத்தான் நாமும் எதிரொலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பண்டிதரின் திண்டாட்டம்...!



உருது மாநாட்டில் பேசும்போது பண்டித நேரு பிராந்திய மொழிகள் இந்தியோடு

அமைச்சருக்கு அரிச்சுவடி!

நிதியமைச்சர் சுப்பிரமணியம் தமிழ் நாட்டுக் காங்கிரசிலேயுள்ள புத்திசாலிகளிலே முக்கியமானவர். சிலகாலம் ஆச்சாரியாருடைய பிரதம ஆழ்வாராக இருந்து பணியாற்றியவர்; ஆகையால் அவரது சாணக்கிய சாகசங்களில் ஒரு சிலவற்றைக் கற்றுக் கொண்டிருப்பவர். அதனால்தான் சட்ட சபையில் தலையும் வாலுமில்லாமல்; சந்தர்ப்பத்துக்கும் ஒட்டி வராத குட்டிக் கதைகள் சொல்வதற்கும் இப்போது பழகிக் கொண்டிருக்கிறார்.

அதோடு அவர் வக்கீலும்கூட. அந்தத் தொழிலில் அவருக்கு ஏற்பட்ட மந்த நிலையோ; அல்லது விடுதலைக் கிளர்ச்சியின் மீது அவர் கொண்டிருந்த மோகமோ என்னவோ; வழக்கறிஞர் சுப்பிரமணியம் அரசியல் வாதியானார். அதனால்தான், பீஸ் வாங்கிக் கொண்டோமே—என்று கூலிக்கு மாரடிக்கும் வீண் வாதப் பண்பு அவரிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

காங்கிரசிலே ஒருநபர் 'நட்சத்திரமாக' வேண்டுமானால் ஒன்று எல்லாக் கட்சிகளிலும் இருப்பதைப்போல அந்த நபருக்குப் பின்னால் உண்மையான தொண்டு தொக்கி நிற்க வேண்டும்; இல்லாவிட்டால் பணம் பக்கபலமாக இருக்க வேண்டும்.

சுப்பிரமணியனாரைப் பொறுத்தவரையில் அவரை காமராசருக்கு ஈடான கர்ம வீரர்; கட்சித் தொண்டர்—என்று எந்தக் காங்கிரஸ் நண்பரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

பணம் உதவி செய்தது; அதனால 'கன'மானார் சுப்பிரமணியம்!

இயற்கையிலேயே சுபாவமாக அமைந்த துடுக்குத்தனம்; செய்த தவறை தவறு என்று நிரூபித்த பின்பும் அதை ஒப்புக்கொள்ள மறுக்கும் திமிர் வாதம்; ஆச்சாரியார் கூட்டுறவால் ஏற்பட்ட குள்ளநரிப் பண்பு; வக்கீல் தொழில் பழகியதால் ஏற்பட்ட வீண் வாத மோகம்; தன்னை விட்டால் காமராசருக்கு வேறு ஆள் இல்லை என்னும் தலைக்கனம்; அதோடு நல்லவர்களையும் நாசகாலர்களாக மாற்றிவிடும் அதிகாரத் திமிர்—ஆக அத்தனை குணாதிசயங்களின் மொத்த உருவம்தான் சுப்பிரமணியம்!

அப்படியொன்றும் வாதத்திறமை பெறாத 'சென்னை சட்ட மன்றத்தின் எட்மண்ட் பர்க்' என்று மறந்தும் அவர் மனச்சாட்சிகூட அவருக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கி விடாது.

ஏனெனில் சட்டசபையிலே கேள்விக்குப் பதில் அளிக்கும்போதும்; தி. மு. கழகத்தவரின் பேச்சுக்கு மறுப்பு கூறும் போதும் பரிதாபத்திற்குரிய சுப்பிரமணியனார் ஒரு பத்தாம் பசலி மளிகைக் கடைக்காரனைப் போலத்தான் காட்சியளிக்கிறார்!

கதையாகச் சொல்லுவார்கள்; இன்னும்கூட பல இடங்களில் அது உண்மையாக இருக்கிறது—மளிகைக் கடைக்காரனிடத்திலே சென்று உப்பு இருக்கிறதா—என்று ஒருவன் கேட்க; அவனிடத்தில் உப்பு இல்லாத வேளையில் அவன் அந்த உண்மையை ஒப்புக் கொள்ளமாட்டான். 'புளி இருக்கிறதே!' என்றுதான் பல்லை இளித்தபடி பதில் கூறுவான்!

அந்த மளிகைக்கடைக்காரன் பதில் சொல்லும் விதத்திலேதான், நேர்மையான வாதமும் அரசியல் சாணக்கியமும் பொங்கிப் பொழிகிறது என்பது உண்மையானால், சுப்பிரமணியமும் அந்த வித்தையில் கைதேர்ந்தவர் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

ஆனால் அதைத்தான் அவரும், அவருக்குப் பின்னால் கை தூக்கக் காத்துக் கொண்டிருக்கும் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்டவர்களும் பெறற்கரிய பேறு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்!

அந்தத் தற்புகழ்ச்சியில் தன்னைப் பலி கொடுத்துவிட்ட கனம் அவர்களுக்கு மற்ற எதிர்க் கட்சிக்காரர்கள் எவருக்கும் இல்லாத அரியதொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

மாறன், எம். ஏ.

அவர் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆதலால் கடைசியில் தேவையான நேரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு பேசும் 'அதிஷ்டம்' கிடைத்திருக்கிறது!

தி. மு. கழகத்தவர்களும்; கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும்; கா. சி. க. வினரும்; இதர சுயேச்சைகளும் பேசி முடித்த பிறகு, போதிய அவகாசம் எடுத்துக் கொண்டு; பரிட்சைக்குத் தயார் செய்து கொள்ளும் பள்ளி மாணவனைப்போல பதிலைத் தயார் செய்து வந்து சுப்பிரமணியம் கடைசியாகப் பேசுகிறார்! அல்ல; அல்ல; இப்போது அவர் 'பேசும்' கட்டத்தைக் கடந்து உண்மையைத் திரித்துக் கூறுகிறார்; அவரது அணியிலேயுள்ள பல சந்துமுனை சிந்து நடைக்காரர்களைப் போலவே வசைபாடுகிறார்!

எந்த தைரியத்தில் கனம் சுப்பிரமணியம் உண்மைக்குக் கொள்ளி வைக்கிறார்? எந்தப் பின்னணியில் அவர் போலிக் குற்றச்சாட்டுகளை அள்ளிக் கொட்டுகிறார்?

—இந்தக் கேள்விகளுக் கெல்லாம் ஒரே பதில்தான்!

—அவருக்குப் பிறகு அவருக்குப் பதில் சொல்லுவதற்கு எந்த எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் அனுமதி கிடையாது!

அவர் பேசுகிறார்; சபையின் அந்தக் கட்டம் முடிகிறது!

சபையிலே ஒரு நேரத்தில் ஒருவர்தான் பேசலாம் என்கிற விதி கண்ணியமுள்ளோரைக் கட்டிப் போடுகிறது!

அடுத்த நாள் பேசும்போது கனம் அவர்களின் ஊசிப் போன குற்றச்சாட்டுகளுக்கும்; குமட்டல எடுக்கிற நையாண்டிகளுக்கும் பதில் சொல்லலாமென்றாலோ அது அந்த நேரம் சம்மந்தமில்லாத பிரச்சினையாகி விடுகிறது!

—இந்த அருமையான வசதியை வைத்துக்கொண்டுதான் கோவைக்கிழார் கோட்டை மன்றத்திலே கும்மாளம் போடுகிறார்!

8—3—58 அன்று அறிஞர் அண்ணா பட்ஜெட் விவாதத்திலே பேசும்போது; இடையிடையே தென்னகம் பிரியாததால் ஏற்பட்ட தொல்லைகளையும் விளக்கிக் கூறினார்கள்; நாம் எதற்காக சட்டமன்றம் நுழைந்தோமோ அந்த இலட்சியத்தை மறந்து, தன் துணைவு அற்று உட்கார்ந்திருக்கும் நூற்றிஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் உணரவேண்டும் என்பதற்காக பள்ளி ஆசிரியர் மாணவருக்கு எடுத்துக் காட்டும் நிலையிலே விளக்கம் தந்தார்கள்:

"நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஆண்டு அறிக்கையைப் படித்துவிட்டு புள்ளி விபரங்களை மட்டும் சொல்லாதீர்கள்; அதன் பலனையும் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொன்ன காரணத்தால் பலன் ஏற்படவில்லை என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஓவியத்தின் வசீகரத்தைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டுமேயொழிய வண்ணத்தைப் பார்த்துச் சொல்வது இல்லை. வண்ணத்தைக்கொண்டு ஓவியத்தைத் தீர்மானிப்பது இயலாத காரியம். ஆகையினால்தான் நாங்கள் வேறு ஒரு வழியை, ஒரு முறையைக் கண்டு பிடித்தாக வேண்டும் என்று நானும் என்னைச் சார்ந்த கட்சிக்காரர்களும் கருதுகிறோம். அது இந்தத் தலைமுறையில் நடக்காது என்று ஆளும் கட்சியில் சொல்லுகிறார்கள். அது இந்தத் தலைமுறையில் நடப்பதாக இல்லை என்றால் இந்தத் தலைமுறையிலேயே அதற்கு வேண்டிய துவக்கம் ஏற்பட்டால்தான் அடுத்த தலைமுறையில் அதற்கு முடிவு ஏற்படும். அந்தக் காலம் வரப் போகிறது. அதற்கு முதலில் வித்து இட வேண்டும். வித்திட்டு, உரம் இட்டு, பயிராகி, அதற்குப் பிறகு பலன் கிடைக்கும் காலம்வரட்டும் என்று காத்திருக்கிறோம், நாங்கள். அப்படிப்பட்ட காலம் தானே வரும் என்று நினைத்து நாங்கள் வித்திடாமல் இருக்க முடியாது என்ற காரணத்தால் நானும் என்னைச் சார்ந்த கழக உறுப்பினர்களும் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் எவ்வளவுதான் எங்களைக் கேலியாகச் சொன்னாலுங்கூட 'வடக்கு—தெற்கு' என்பதை எடுத்துச் சொல்லிக் கொண்டே வருகிறோம்."

—சிறு நாடுகள் ஏன் வாழ முடியாது என்பதை விளக்கி; அதற்கு நிதியமைச்சரால் 'மகா புருஷர்' என்று புகழப்படும் பண்டித நேரு சிறு நாடுகளும் வாழ முடியும் என்று கூறியிருப்பதை மேற்கோள் காட்டி அண்ணா அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்!

அதற்கெல்லாம் நேர்மையான முறையில் பதில் கூற முயற்சிக்கவில்லை, நிதியமைச்சர்! ஒரு மூன்றாம் தர வக்கீலைப்போலவே அவர் பிரச்சினையை வேறொரு கோணத்திற்கு இழுத்துச் சென்று விட்டார்.

"(கனம் அண்ணாத்துரை அவர்கள்) வித்திட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்... அந்த வித்து எப்படிப்பட்டது என்று ஆராய்ச்சி செய்கின்ற முறையில் பார்க்கும் போது அந்த வித்து எப்படி ஆரம்பித்தது; அந்த வித்து என்ன; அந்த வித்தின் தரம் என்ன—என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்துத்தான் வந்திருக்கிறேன்...... ஆகையால்தான் இந்த வித்து என்ன—மூலம் என்ன இந்த இயக்கத்திற்கு—என்பதைப் பார்க்க வேண்டுமென்று, முதலிலிருந்து அதன் சரித்திர வரலாற்றை எடுத்துப் பார்த்தேன்...."

[தொடர்ச்சி பக்கம்—9]

இலட்சத்தை வாங்கிக் கொண்டார்! இலட்சியத்தைப் பறக்க விட்டார்!

இரும்புப் பெட்டியின் முன்னால் மண்டியிட்ட எந்த வல்லரசும் அதிக நாள் வாழ்ந்ததில்லை!

வெள்ளிப் பணத்தை வாங்கிக் கொண்டு மக்கள் நலனுக்குக் கொள்ளி வைக்கும் குள்ளநரிக் குணம் படைத்தோர் குழி தோண்டிப் புதைக்கப்பட்டதாகத்தான் வரலாறு கூறுகிறது!

அத்தகைய பரிதாபத்திற்குரிய நிலை காந்தியார் வளர்த்த காங்கிரசிற்கு ஏற்பட்டுக் கொண்டு வருவதை நம்மால் சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை.

கேரளம் தவிர்த்த அகில இந்திய அரசியலிலே காங்கிரஸ் பெருவாரியான செல்வாக்கோடு பதவிக்கு வந்தது.

எப்படி?

கொள்கையைக் காட்டி; இலட்சியத்தின் சிறப்பை விளக்கி; சாதனைகளின் பட்டியலை மக்கள் மன்றத்திலே பரப்பி; நேர்மையான, நாகரிகமான முறையிலா அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்?

இல்லவே இல்லை!

பாதாளம் வரைக்கும் பாயக் கூடிய பணம் பேசிற்று. கல்வியறிவில்லாமல்; வயிற்றுக்கு உணவில்லாமல்; சாவுக்கும் வாழ்வுக்குமிடையிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கான பாமர மக்களுக்கு வாக்குரிமையை வாங்கிக்கொடுத்து; அந்த வாக்குரிமையை விலை கொடுத்து வாங்கி மாட்டுப் பெட்டியை நிரப்பிக் கொண்டார்கள்.

பணமா? பண்புள்ள கொள்கையா?

—பாவம்; பசியால் தவிக்கும் அந்த நடைப் பிணங்களுக்கு என்ன தெரியும்?

பணம் வென்றது; கொள்கை வீழ்ந்தது!

ஆமாம்; இவ்வளவு இலட்சக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி இறைத்து ஓட்டுக் கொள்முதல் செய்தார்களே; இந்த மாட்டுப் பெட்டிக்காரர்களுக்கு இவ்வளவு திரவியம் எங்கிருந்து வந்து சேர்ந்தது?

வார்தாவிலே ஆசிரமம் அமைத்துக்கொண்டு; சீமான் வாழ்வைத் துறந்து எளிமையின் பெருமையை உலகத்துக்கு எடுத்தோதிய உத்தமர்கள் கையில் பெருவாரியான அளவில் வாக்குகளைப் பரிவர்த்தனை செய்யக்கூடிய வகையில் செல்வம் எவ்வாறு குவிந்தது?

ஆமாம்; அந்த மூலகாரணம் இப்போது காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்து கிளம்பிவரும் அழுகல் நாற்றத்திற்கு அடிப்படையாயிருக்கிறது!

எப்படியும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்—என்கிற தணியாத பதவி ஆசை அவர்களைப் பணம் தேடும் படலத்தில் ஈடுபடுத்தியது!

பணம் முதலாளிகளின் கையில் அல்லவா இருக்கிறது!

அதனால் முதலாளிகளின் முன்னால் மண்டியிட்டது, 'ஏழையர் நண்பன்' என்று ஒரு காலத்தில் இறுமாப்போடு கூறிக்கொண்ட காங்கிரஸ்!

—இதன் விளைவைத்தான் மற்ற மாநிலங்களைப்போலவே உத்தரப் பிரதேசக் காங்கிரசும் வேதனையுடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறது!

உத்தரப் பிரதேசம்—இந்திய அரசியலில் நினைப்பது எதையும் சாதித்துக்கொள்ளும் அளவுக்கு வலிமை பெற்றுத் திகழும் மாநிலம்!

பண்டிதரின் இருப்பிடம்; இந்தி வெறியர்களின் பிறப்பிடம்—இதைத் தவிர இந்திய உபகண்டத்து அரசியலில் உத்தரப் பிரதேசத்தின் செல்வாக்கைக் குறிப்பதற்கு வேறு என்ன வேண்டும்?

அந்த உத்தரப் பிரதேசத்தில்தான் பொதுத்தேர்தல் நேரத்தில் 'நிதி' என்கிற பெயரில்—சர்க்கரை ஆலை முதலாளிகளிடமிருந்து சுமார் 40 லட்சத்திற்கும் அதிகமான ரூபாய்கள் வசூலிக்கப்பட்டிருக்கிறதாம்!

நாற்பது லட்சம் ரூபாய்—சாதாரண தொகையல்ல!

இவ்வளவு பெரிய தொகையை முதலாளிகள் அனைவரும் தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ ஓர் அரசியல் கட்சிக்குத் தரவேண்டிய அவசியம் என்ன?

காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளின்பேரில் காதல் கொண்டா அவர்கள் நிதி உதவும் திட்டத்தை மேற்கொண்டார்கள்?

இல்லை; இல்லை!

காங்கிரசுக்குத் தேவைப்படும் தேர்தல் நேரத்தில் பொருளுதவி செய்தால், இந்த நன்றியை மறக்காமல் காங்கிரஸ் பதவிக்கு வந்ததும் சலுகைகள் என்கிற பெயரிலும்; 'பர்மிட்டுகள்' என்கிற பெயரிலும் அது கைம்மாறு செய்துவிடும்!

—இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாற்பது லட்சம் ரூபாய்கள் காங்கிரஸ் உண்டியலுக்குள் போடப்பட்டன!

அரசாங்க அதிகாரிகள் சிலர் லஞ்சம் வாங்குவதாகப் புகார் கூறும் இந்த ஆட்சியாளர்கள் முதலாளிகளிடம் கை நீட்டி; அவர்களுக்காக அதிகாரத்தை வளைக்கவும் தயங்காது இப்படி மறைமுகமாக வாங்கும் லஞ்சத்திற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

உ. பி. காங்கிரஸ் ஆலை முதலாளிகளிடம் லஞ்சம் வாங்கியது!

அதன் விளைவைப் பாருங்கள்:

○○○ இரண்டாண்டுகளுக்கு முன்னால் சில பண முதலைகளுக்கு தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு—என்பதைக் காரணம் காட்டி மூன்று கோடி ரூபாய்கள் கடன் கொடுத்திருந்தது, உ. பி. அரசாங்கம்!

இது வரையில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் எதுவுமே நிறுவப்படவில்லையாம்! இதனால் ரூ. 36 லட்சமும், வட்டியும் அரசாங்கக் கணக்கில் நஷ்டமாம்!

○○○ மகாராஜாக்களை ஒழித்துவிட்டோம் என்கிறார்களே; அப்படிப்பட்ட ராஜா ஒருவருக்கு எட்டாண்டுகளுக்கு முன் பொருள்களைக் குளுமைப்படுத்திப் பாதுகாக்கும் நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக இரண்டு லட்சம் ரூபாய்கள் கொடுத்தார்களாம்!

அந்தக் கம்பெனியின்பேரில் அலாதி அக்கறை காட்டி ஒரு ஆண்டு காலம் மின்சாரம்கூட

[தொடர்ச்சி பக்கம்-10]

கவனம்....கவனம்....!

'சக்ளா' அறிக்கையின் விளைவாக டி. டி. கே. யுக்கு ஏற்பட்ட நிலை தங்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற காரணத்தால், மத்திய மந்திரி சபை இப்போது மிகவும் கவனமாக நடந்துகொள்கிறது என்று 'சங்கார்ஸ் வீக்லி' சித்தரிக்கிறது'

சுருளிமலை

மு. கருணாநிதி

சென்ற இதழில்...

மைனாவின் கற்பு மூன்றாவது முறையாக கோயில் நிர்வாகியால் களங்கப்படுத்தப் படுகிறது!...

இச்சை தீர்ந்தபின் கோயில் நிர்வாகி மரப் பெட்டியிலிருந்து மைனாவுக்குப் பணம் தர முயல்கிறார். அப்போது மைனா, அருகே இருந்த குத்துவிளக்கை எடுத்து, அவரது பிடரியிலே அடித்து வீழ்த்துகிறாள். அவர் செத்தாரா பிழைத்தாரா என்று கூட கவனிக்காமல் வெளியே ஓடி விடுகிறாள். தன்னுடைய பூனைக்குட்டியுடன் தூரத்தில் போய்க் கொண்டிருந்த பீதாம்பர பாகவதரைப் பின் தொடர அவள் மனம் ஏனோ மறுத்தது...

இனி அவள் என்ன செய்வது?...

சிற்றூர் நோக்கி அவள் கால்கள் நடந்தன. சிங்காரத்தை கடைசியாக ஒரே ஒருமுறை சந்தித்து, சீரழிந்த தன் வாழ்வுக் கதையை எடுத்துச் சொல்லி, இறுதியிலே சாவிலே நிம்மதி பெற்று விடலாம் என்று முடிவு கட்டி விட்டது, பயங்கரப் போராட்டத்தில் ஈடுபட்டு பலவீன மடைந்து விட்ட அவளது பெண் நெஞ்சு...

சிற்றூர் எல்லையிலே பஞ்சாயத்தார் பரமசிவத்தின் பைத்தியக்காரச் செல்வனை சந்திக்கிறாள். சிங்காரத்தின் வீட்டு முகவரி அறியச் சென்ற அவளிடம், ஏதேதோ புலம்பிக் கொட்டுகிறான், அந்த உளறுவாயன். விளைவு என்னவாகும் என்று உணராது, சிங்காரத்துக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருப்பதாக விளையாட்டுக்காகச் சொல்லி வைக்கிறான். சிங்காரத்தையும் 'துரோகி' என்று முடிவு கட்டி விட்ட மைனா, சிங்காரத்தை சந்திக்க வேண்டுமென்பதை வெறுத்து நடக்கிறாள்....

அதே சமயம் தன் தங்கை கற்பூரத்திடம் தான் மைனாவைத் திருமணம் செய்து கொள்வது பற்றிய பேச்சில் ஈடுபட்டிருக்கிறான், தீச்சட்டி சிங்காரம். தாய் தந்தையற்ற அனாதை மட்டுமல்ல; கணவனைப் பிரிந்த வாழாவெட்டி ஒருவளைத் தன் அண்ணன் மணம் செய்துகொள்ள விரும்புகிறான் என்பதை அறிந்த கற்பூரம் உணர்ச்சி வசப்பட்டு சாமி ஆடுகிறாள். பின், தீச்சட்டி சுருளிமலை அக்காவான பொன்மணியை மணம் செய்துகொள்ள வேண்டும் என்கிறாள் கற்பூரம்; மைனாதான் வேண்டும் என்கிறான் சிங்காரம்; கற்பூரமோ தான் உயிரோடு இருந்து அவன் மனைவியைக் காண மாட்டேன் என்று கூறுகிறாள்...

குழப்பத்தில் சிக்கி விட்ட சிங்காரம் 'மருந்து' தேட பக்கத்துத் தெரு நோக்கி நடக்கிறான்...

7

மைனாவுடன் வாழ்க்கை தொடங்குவதற்குத் தன் சகோதரியே முதல் தடையாக முளைத்து விட்டதை நினைத்து நினைத்து வரண்டுபோன நெஞ்சத்தை புளித்துப்போன மதுபானத்தால் நனைத்து ஈரமாக்கி விட முடியும் என்று சிங்காரம் நம்பினான். நிலை மறக்கும் வரையில் நன்றாகக் குடித்தான். போதை தெளிந்த பிறகு மீண்டும் வேதனைகள் மூலை முடுக்குகளிலேயிருந்து தலைநீட்டி மூளையைக் குடையும் என்பதை சிங்காரம் மட்டுமல்ல; மதுபானத்தைக் கவலை தீர்க்கும் மருந்து எனக் கருதும் அனைவரும்மே மறந்து விடுகிறார்கள்.

பொழுது விடிய விடிய போதையும் குறைந்தது. இரவு தன் தங்கை கற்பூரத்திடம் மைனாவைப்பற்றிக் கூறியதும் அதற்கு அவள் கூறிய பதிலும் அவன் நினைவுக்குத் திரும்பின. மைனாமீது அவன் கொண்டு விட்ட மையல், தங்கையின் தடைகளையெல்லாம் உடைத்தெறியக்கூடிய வலிமை வாய்ந்தது என்ற உணர்ச்சி மேலோங்கி, அவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது.

எப்படியும் மைனாவுடன் சிற்றூர் குடும்ப வாழ்க்கையை சிங்காரமாக ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எந்தப் பக்கமிருந்து எதிர்ப்பு வந்தாலும், எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் கவலைப்படப் போவதில்லை. மைனா அழகான பெண் மாத்திரமல்ல; அன்பும் நல்ல பண்பும் கொண்டவள்—வாழ்க்கையிலே எதிர்பாராத ஏமாற்றத்தால் திடுக்கிட்டுப் போயிருப்பவள். அவளுக்குத் தன் ஒருவனைத் தவிர வேறு ஆதரவே இல்லை. தானும் கைவிட்டு விட்டால் அவள் பைத்தியமாக மாறி விடுவாள். உடனே குடித்தனத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்தே தீர வேண்டும் என்றெல்லாம் தீவிரமாக யோசித்து முடிவெடுக்கலானான் சிங்காரம்.

இரவு அவன் நன்றாகக் குடித்திருந்தபோது மைனாவை நினைத்து மயான காண்ட மெட்டிலே காதல் கீதமே பாட ஆரம்பித்துவிட்டான். அவனுடைய கூட்டாளிகள் தடுத்திரா விட்டால் தள்ளாடித் தள்ளாடி நடந்தாவது தப்பித் தவறி வேப்ப மரத்தடிப் பக்கம் போயிருப்பான்.

தற்கொலைக்குத் தயாராகி விட்ட மைனாவைப் பார்த்திருப்பான். மைனா, அவன்மீது கொண்ட சந்தேகம் நிவர்த்தியாகியிருக்கும். கோயில் நிர்வாகியின் கோணல் சேட்டையை அவள் கூறியிருப்பாள். சிங்காரத்தின் ஆத்திரம் நிர்வாகியின்மீது திரும்பி அது பல விபரீத விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும். இப்படி எதுவுமே நடக்காமல் அவனை முடக்கி விட்டது மயக்க உணர்ச்சி! வேம்பில் கரும்பு தொங்குவது போல் அவள் தொங்கி விட்டாள்.

சிங்கா நல்லூரில் பிறந்தாள். சிந்தை மணக்கும் சீரான வாழ்வு எய்தியதாகப் பெருமகிழ்வுகொண்டு வாழ்க்கையின் முதற்படியில் கால் வைத்தாள்.

பாசி பிடித்த அப்படியிலிருந்து வழுக்கித் தலைகுப்புற விழுந்து மூர்ச்சையானாள். பின் கண் திறந்து பார்க்கும்போது வரண்டுபோன நாவில் ஒரு துளி தேன் விழுந்ததுபோல சிங்காரம் வந்தான். தேன் துளிமீது தேள் விஷம் கொட்டியதுபோல் கோயில் நிர்வாகி குறுக்கிட்டான். மைனா அடியோடு பாழ்படுத்தப்பட்டு விட்டாள். அவளுக்கு இனிமேல் உலகத்திலே ஆதரவு அந்த கனமான வேப்பமரக் கிளைதான். அவளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு, அந்த இரண்டு முழக் கயிறோடு முடிந்து விட்டது. அந்த இருட்டில் அவள் எவ்வளவு துணிச்சலாக வேப்பமரத்தின்மீது ஏறினாள்!

அவள் எதற்காகப் பயப்பட வேண்டும்? தவறிக் கீழே விழுந்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்ச வேண்டுமா என்ன? அப்படி விழுந்தாலும் அவள் விரும்பியபடி உயிர் போய்விடப் போகிறது. ஆகவே மளமளவென்று மரக கிளையில் தொத்தினாள். கயிற்றைக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு மரக்கிளையில் இணைத்தாள். "அப்பா!" என்று வம்மும் குரலில் ஒருமுறை கூவினாள். அந்த ஒரு வார்த்தையில்தான் எவ்வளவு கதை அடங்கியிருக்கிறது. மகளின் சந்தோஷம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவள் தந்தை எவ்வளவு கஷ்டப்பட்டார்! மகளின் மனதுக்குப் பிடித்த மணவாளனைத் தேர்ந்தெடுத்தோம் என்பதிலே அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி! நல்லவேளை; அவர் இந்தக் கொடுமையையெல்லாம் பார்க்காமலே கண்களை மூடிவிட்டார் என்ற ஆறுதல் கலந்த பெருமூச்சு வெளிப்பட்டது. அதுதான் அழகி மைனாவின் கடைசி மூச்சு போலும்!

அடுத்த கணம் கிளையிலிருந்து குதித்து கயிற்றிலே ஊசலாடினாள். சில விநாடிகள் உயிர்த்துடிப்புக்குப் பிறகு மைனா அமைதி பெற்றாள்.

இப்போது அவள் நெஞ்சிலே துயரமில்லை. பீதாம்பர பாகவதரின் உருவம் அவள் கண் எதிரே வந்து மிரட்டுவது இனி முடியாது. கோயில் நிர்வாகியின் பயங்கர உருவத்தை நினைத்து நினைத்துப் பயப்படும் அவள் மனக்கண் அறவே மங்கி விட்டது!

தீச்சட்டி சிங்காரத்தைப் பற்றிய நினைவு அலைகள் எழுவதற்கு இனி இடமே இல்லை. அவள் தன்னை விடுவித்துக் கொண்டாள். ஆனால் சிங்காரத்தைத் துடிக்க வைத்துவிட்டுப் போய் விட்டாள். அவளை விட்டுப் பிரிந்து வந்தது முதல் அவளது பெயரையே மந்திரம் போல் உச்சரித்துக் கொண்டிருந்த அவனுக்கு தலையிலே இடி விழுந்தது போலாயிற்று அந்தக் காட்சி. குடித்தனம் நடத்துவதற்கு அவன் போட்ட திட்டங்கள் எல்லாம் சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறிவிட்டன.

நினைவிழந்து விழுந்த அவனை அருகாமையிலே யார் வீட்டுக்காவது உடனே தூக்கிக் கொண்டு போகும்படி பஞ்சாயத்தார் பரமசிவம் அவசரப்பட்டார். மருத்துவரை அழைக்க ஒரு ஆள் ஓடினான். அதற்குள் சிங்காரத்தைப் பூஞ்சோலையின் வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போய் படுக்க வைத்தார்கள்.

பூஞ்சோலையம்மாள் பதறிப் போய் அவன் மயக்கம் தீர்வதற்காக ஏதேதோ சிகிச்சைகள் செய்தாள். ஒன்றும் பயன்படவில்லை. அண்ணனுக்கு ஏற்பட்ட ஆபத்தைக் கேள்விப்பட்ட கற்பூரம் பூஞ்சோலை வீட்டுக்கு ஓடினாள். அங்கே சிங்காரம், அசைவற்று விழுந்து கிடக்கும் காட்சியைப் பார்த்ததுதான் தாமதம்; உணர்ச்சி வசப்பட்டு விட்டாள். ஆவேசம் வந்து விட்டது.

அவளைக் கவனிக்கும் வேலை பெரிதாகிவிட்டது, பூஞ்சோலைக்கும் பொன்மணிக்கும்!

"ஆஹோய்! ஏ, மக்களா! இது தெய்வத்தோட குத்தம்!

தெய்வத்தோட குத்தம்! இந்த ஜீவனுக்கு ஒரு குறையும் வராது; பயப்படாதிங்க! பயப்படாதிங்க!''

—என்று கத்த ஆரம்பித்தாள் கற்பூரம்.

கிழவர் பொன்னையா, 'லொக், லொக்' என்று இருமிக்கொண்டே மெதுவாக எழுந்து மாடத்திலுள்ள விபூதிக் கிண்ணத்தை கற்பூரத்திடம் நீட்டினார். கற்பூரம், விபூதியை வாரி யிறைத்து சிங்காரத்தின் தலையிலும் இரண்டு மூன்று பலமான அடிகள் கொடுத்து விட்டுப் பிறகு ஆவேசம் ஆயாசமாக மாறவே, அப்படியே ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அதற்குள் மருத்துவர் வந்துவிட்டார். மயக்கம் தீர்வதற்கான மருந்துப் புகை சிங்காரத்தின் மூக்கு வழியாகப் பிரயோகிக்கப்பட்டது.

இந்தச் சமயம், கற்பூரத்திற்கும் ஆவேச உணர்ச்சி அறவே தணிந்துவிட்டது. ஆயினும் அவள் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அவள் மூளை பலமாக வேலை செய்தது. தனக்கு வரும் ஆவேசத்தை ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டாள். இதுவரையில் அவளுக்கு ஆவேசம் வருவது அவளை யறியாமலே வந்துவிடும் திடுக்கிடும் நிகழ்ச்சி, அதிகப் பயங்கரமான செய்தி—இவைகளால் அவள் நிலையிழந்து விடுவாள். சாமியாடத் தொடங்குவாள். இப்போதோ அவள் வேண்டுமென்றே தந்திரமாக சாமியாட முடிவு செய்தாள்.

இரவு தனக்கும் தன் அண்ணனுக்கும் நடைபெற்ற வாக்குவாதம் அவள் ஞாபகத்தில் இருந்தது. அதிலிருந்து அவன், தூக்கு மாட்டிக் கொண்டது அந்த மைனாவாகத்தானிருக்கு மென்று யூகித்துக் கொண்டாள். அண்ணனுக்கும் பொன்மணிக்கும் முடிச்சு போட வேண்டும் என்று கற்பூரத்திற்கு ஆசையல்லவா? அதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அவள் தீர்மானித்தாள்.

மருத்துவர் முயற்சியால் சிங்காரம் மெதுவாகக் கண்களைத் திறப்பதற்கும், மறுபடியும் கற்பூரம், "ஹோய்" என்று கத்திக் கொண்டு சாமி ஆட ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது.

"ஏ, மக்களே! கேளுங்க...... இந்த ஜீவனுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து, சாதாரண ஆபத்தல்ல! வேப்ப மரத்தடியிலே தூக்கு மாட்டிக்கிட்டாளே......அவளோட உயிரு பேயா மாறி இந்த ஜீவனைத் தொத்திகிட்டுது!..." என்று கற்பூரம் கூச்சல் போட்டாள்.

அதுகேட்ட, சிங்காரம்...... "ஆமாம், ஆமாம்! என்னைத்தான் தொத்திகிட்டுது! என் மைனாகிட்ட என்னை விடுங்க! மைனா! மைனா!!" என்று அலறியவாறு எழுந்து ஓட முயன்றான்.

அவனை மற்றவர்கள் விடவில்லை. பிடித்துப் படுக்க வைத்தார்கள். கற்பூரம் தொடர்ந்தாள்:

"பார்த்தீங்களா, பார்த்தீங்களா பேய்ச் சேட்டையை! மக்களே! இந்த ஜீவனை வெளியே விடக் கூடாது! பத்து நாளைக்கு இந்த வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது இந்த ஜீவன்! அப்படி வெளியே போனால், இந்த ஜீவன் மேலிருக்கிற பேய், இந்த வீட்ல இருக்கிற யார் மேலாவது தொத்திக் கொள்ளும்...பத்து நாளைக்கு இங்கேயே படுக்க வைத்து, மந்திரம்—தந்திரம்—மருத்துவம் செய்து பேயை அணு அணுவாகக் கொல்ல வேணடும். அப்பத்தான் இந்த ஜீவனும் பிழைக்கும்! வீட்ல இருக்கிறவங்களும் தப்ப முடியும்!"

கற்பூரம், சாமியடிக் கீழே விழுந்தாள். சாமி, மலையேறி விட்டது ஒரு விதமாக!

பூஞ்சோலைக்குத் திகில் பிடித்துக் கொண்டது. சிங்காரம் வெளியே போனால் வீட்டிலிருப்பவரைப் பேய்பிடித்துக் கொள்ளுமே என்ற பீதி அந்த அம்மாளை ஆட்டிப்படைத்தது.

மலையேறிய கற்பூரமோ, ஒன்றுமறியாதவள்போல பூஞ்சோலையிடம், தாவிச் சென்று "அய்யோ! எங்க அண்ணனுக்கு என்ன?" என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

சிங்காரம், "மைனா! மைனா!" என்று எழுவதும் சுற்றியிருப்போர் அவனைப் பிடித்துப் படுக்க வைப்பதும் பெரிய வேலையாகி விட்டது.

கற்பூரம், அண்ணனை வீட்டுக்கு அழைத்துப்போக வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். பூஞ்சோலை, முடியவே முடியாது என்று மறுத்து, குலதெய்வம் கூறியதுபோல பத்து நாளைக்குத் தன் வீட்டிலேயே இருந்து சிங்காரம் சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

கற்பூரத்திற்கு உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி. அண்ணனும் பொன்மணியும் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்படுமென்றும் அதிலிருந்து இருவரும் ஒருவரையொருவர் நேசித்துத் திருமணத்திற்குத் தயாராகிவிடுவார்கள் என்றும் கற்பூரம் வகுத்த திட்டத்தின் முதற் கட்டத்திற்கு அமோக வெற்றி கிடைத்து விட்டது. அவளையறியாமல் வரும் ஆவேசம் இதுவரை அவளுக்குப் பெருத்த வேதனையாக இருந்தது. இப்போதோ அதைத் தன் நன்மைக்காகப் பயன் படுத்திக் கொண்டோம் என்ற பூரிப்பு ஏற்பட்டது அவளுக்கு!

சிங்காரம், தன்னை வெளியே விடும்படிக் கெஞ்சினான். அழுதான். புலம்பினான். யாரும் கேட்கவில்லை. மிரட்டிப் பார்த்தான். திட்டினான். திமிறினான். அதெல்லாம் பேய் சேட்டையென்று தங்கள் முடிவுக்கு ஆதாரமாக்கிக் கொண்டார்கள் சுற்றியிருந்தோர்!

சிங்காரத்தின் கோபம், அதிகரித்தது. துள்ளி யெழுந்து தடுத்து நிறுத்தியவர்களைத் தாக்கிவிட்டு வெளியே ஓட எத்தனித்தான். அவனுக்குத் தடை பலமாயிற்று. எல்லோருமாகச் சேர்ந்து, அவன் கையையும் காலையும் கட்டிப் போட்டார்கள். ஒரு கயிற்றுக் கட்டிலில் அவன் கிடத்தப்பட்டான்.

அண்ணனை இம்சிப்பது பார்ப்பதற்குக் கஷ்டமாக இருந்தாலும், அதன் பலனை நினைத்து உள்ளுக்குள்ளேயே மகிழ்ச்சியடைந்தாள் கற்பூரம். இனி, எதுவும் முடியாது என்று தெரிந்துகொண்ட சிங்காரம், அமைதியாகப் படுத்துவிட்டான் தன் தங்கைமீது வருகிற ஆவேசத்தை முதன் முறையாக இப்போதுதான் அவன் சபித்தான்.

முரசொலி சந்தா விபரம்	
உள் நாடு	
ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50
வெளி நாடு	
ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

சிங்காரம் அமைதி பெற்றதும் ஒவ்வொருவராகப் புறப்பட்டனர். நாளைக்கு நல்ல மந்திரவாதியாக அழைத்து வந்து சிங்காரத்தின் பேயை ஓட்டிவிடலாம் என்று சிலர் உறுதியளித்துச் சென்றனர். கரகமாடிக் கண்ணன் பேய் ஓட்டுவதில் வல்லவன்; அவன் பார்த்தால் பேய் பறந்துவிடும் என்று ஒரு அபிப்பிராயம் கூறப்பட்டது.

அந்தச் சேதி காதிலே விழுந்ததும் சிங்காரம், "ஹா! என்ன சொன்னாய்?" என்று அலறினான், ஆத்திரமாக! கண்ணனுக்கும் தன் வீட்டுக்குமுள்ள பரம்பரைப் பகையை நினைத்து, சிங்காரம் அப்படிக் கத்தினான்.

ஆனால் மற்றவர்கள், "அது பேயின் குணம்" என்று தீர்மானம் செய்துகொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் கலைந்தது. கற்பூரம் மாத்திரம் அண்ணனுக்குப் பக்கத்தில் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பூஞ்சோலையும், பொன்மணியும் திகிலடைந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். பொன்னையாவுக்கு எல்லாம் புதுமையாய்த் தோன்றின போலும்; "ம்....ஈஸ்வரா!......ஈஸ்வரா!" என்று முனகிக்கொண்டார்.

வீட்டுக்கு வெளியே குழலோசை கேட்டது. கருளிமலை தான் வருகிறான் என்று பொன்மணி ஆவலோடு எதிர்பார்த்தாள். கருளிமலை, எதைப்பற்றியும் கவலைப்படாத நிலையில் அநாயாசமாகக் குழலை ஊதியபடி திண்ணையில் உட்கார்ந்தான்.

பொன்மணி ஓடிவந்து, "தம்பி! என்ன ஆச்சு?" என்று கேட்டாள்.

"என்ன ஆச்சு? செத்தவள் பிழைத்துக் கொண்டாள்!" என்றான் கருளிமலை.

"ஆ! பிழைத்துக் கொண்டாளா?"—பொன்மணி ஆச்சரியத்தால் வாய் பிளந்தாள்!

தொடரும்

தி. மு. கழகக் கிளைகளுக்கு வேண்டுகோள்

கிளைக் கழகப் பதிவுச் சீட்டுக்கள் புதிதாகத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட வேண்டியிருப்பதால், தி. மு. கழகக் கிளைகளனைத்தும் தற்போதுள்ள நிர்வாகிகள் பெயரை அவரவர் தம் தெளிவான முகவரியுடன், 15—3—58-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எழுதியனுப்பும் விவரத்தில் உறுப்பினர் சேர்த்தனுப்பிய நாளையும், தற்போதுள்ள உறுப்பினர் எண்ணிக்கையையும், குறிப்பிட்டு அனுப்பக் கேட்டுக்கொள்வதுடன், உறுப்பினர் சேர்த்தனுப்பாத கிளைகள் பதிவு செய்துகொள்ளப்படமாட்டாவென்பதையும் தலைமைக் கழகம் அறிவித்துக்கொள்கிறது.

புதுக் கிளைகள் துவக்கப்பட்டு, அதுபற்றிய விவரத்தை தலைமைக் கழகத்திற்கும், மாவட்டக் கழகத்திற்கும் அறிவிக்கப்படாமல், எல்லா மாவட்டங்களிலும் அநேக கிளைக் கழகங்கள் இருப்பதாலும், பழைய கிளைகளிலேயே நிர்வாகிகள் மாறுதல் அவ்வப்போது நடைபெற்று அதனைத் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தாலும், எல்லா புதிய-பழைய கிளைகளும், தங்கள் தங்கள் நிர்வாகிகளையும், முகவரியையும் தெரிவித்தபின்பே பதிவுச் சீட்டுக்கள் அனுப்பப்படவிருக்கின்றன.

15—3—58-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க)

கற்பனை உரையாடல்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ரும் கோதுமை சப்பாத்தியும், புளியங்கொட்டை அல்வாவும், கீரைக் கூட்டும், கேழ்வரகு ரொட்டியும், பயறு கஞ்சியும் உணவாகக் கொள்ளவேண்டியது...

சனுர்த்தனன்: சாப்பாட்டிலே சிக்கனமா?... சம்போ மகாதேவா! சாக வேண்டியதுதான்!...(சிரிப்பு!)

பண்டரிநாதன்: கோவிந்தா!... கோவிந்தா!...பிச்சைப் பாத்திரமேந்தி புறப்படுவீர், வடக்கிலே உள்ள காசி நகர் நோக்கி!

சப்புத் தாத்தா: அமைதி!... அமைதி!...

மணியோசை: நான் என்ன செய்வது?நீங்களே சொல்லுங்கள், அடுத்த ஐந்தாண்டிற்குள் நமது குடும்பம் முன்னுக்கு வந்துவிடும்!...இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்!...

சப்புத் தாத்தா: எதிர்க் கட்சித் தலைவி மணிநாயகி பேசலாம்!...

மணிநாயகி: அவைத் தலைவர் அவர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! ஆண்டுக்கொரு கைத்தறி புடவைதான் எனக்கு அளிக்கப்படுமென்பதையும், சினிமாவுக்கு போகக்கூடாதென்ற திட்டத்தையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்! மணியோசையார், மானபுமிக்க பற்றுக்குறை பட்ஜெட்டைப் படிக்கும்பொழுது பரிதாபமாக இருந்தது! முன்பே ஆயிரக் கணக்கில் கடன்பட்ட அவர் நெஞ்சம் கலங்குகிறது!

நிதி உதவி அளிக்காத வடநாட்டுப் பத்திரிக்கைகளுக்கு நேரத்தையும், காகிதம், இங்க் முதலானவைகளையும் செலவு செய்து இவர் எழுதி அனுப்பி வரும் கதைகளையும் கட்டுரைகளையும் நிறுத்தினல் ஏராளமாக மிச்சம் பிடிக்கலாம்!

மேலும் இவரின் பட்ஜெட் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு "இவருடன் இனி சேர்ந்து வாழ்வதில் ஒருபயனுமில்லை!" எனவும், 'விவாக ரத்து' கோரி இவரை விட்டு விலகிச் செல்வதே சாலச் சிறந்ததெனவும்தீர்மானித்து விட்டேன்!

"இந்த மந்திரிகளின் பட்ஜெட்களைப் படிக்கும் பொழுது வீட்டிலே மனைவிமார்கள் வாடும் பட்ஜெட்களின் நினைவுதான் வருகிறது!" என்று வேடிக்கையாக ஓர் உறுப்பினர் டெல்லியிலே கூறினராம்! படித்த மனைவிமார்கள் இந்நாட்டின் நிதி மந்திரிகளைவிட மிக மிக நன்ருக பட்ஜெட் தயாரிப்பார்கள்! ஆனல் இந்த நாட்டின் பட்ஜெட்டுகளை "ஆடம்பர மனைவிகள்" போடும் பட்ஜெட்டுகளுக்கு வேண்டுமானல் ஒப்பிடுங்கள்!

முடிவாக நான் என் கணவனிடமிருந்து பிரிந்து தனியாக ஒருதொழில்கடத்தினல்தான் இந்தக் குடும்பம் முன்னேறுமாதலால், மணியோசையாரிடமிருந்து இப்போதே விவாகரத்து செய்து கொள்கிறேன்! மணியோசையோடு சேர்ந்து வாழ்ந்து நான் மடிவதோடு, இந்தக் குடும்பத்தையும் சீரழிப்பதைவிடப் பிரிந்து சுதந்திரமாகவாழ்ந்து குடும்பத்தை முன்னேற்றுவதே சிறந்தது! நான் அப்படிச் செய்தால்தான், என்னுடைய குழந்தைகளாவது வருங் காலத்தில் வளமாக வாழ இயலும்! இல்லாவிட்டால் என்னையும் என் குழந்தைகளையும்திரு.மணியோசையார், திரும்பி வந்தக் கதைக் குப்பைகளோடு போட்டுத் தீமூட்டி எரித்து அழித்துவிடுவாரென்பது திண்ணம்!

எங்கள் குடும்பத்தின் பட்ஜெட் விவாதமும், அதன் முடிவில் நிகழ்ந்த இந்த விவாக ரத்து நிகழ்ச்சியும் நம் திராவிட நாட்டின் மக்களுக்கு சிறந்ததொரு பாடம் கற்பிக்கிறது. வடநாட்டு ஆடம்பரமிக்க ஆடவனுக்கு வாழ்க்கைப் பட்ட அறிவுமிக்க, ஆற்றல் மிகக தென்னுட்டு மங்கையும் என்னைப் போலத்தான் இன்பங்கள் யாவையும் இழந்து, ஏராள இன்னல்களால் இதயம் துடிதுடிக்க வாடி வதங்குகிருள்! வடநாட்டுக் கணவன் பேசும் இந்திப் பேச்சு இவளுக்குப் புரியவில்லை; இவள் பேசும் தமிழ் பேச்சு அவனுக்குப் புரியவில்லை! இந்த நிலையிலே இருவரும் கூடிவாழ முடியுமோ? ஆற்றலில்லாத, அறிவில்லாத தறுதலைக் கணவனுக்கு அறிவுரை கூறித் திருத்தக்கூட இயலாத நிலையிலே தென்னகமங்கை தவிக்கிருள்! துடிதுடிக்கிருள்! கணவனைத் திருத்த இயலாத நிலை — கணவனுல் இன்பங்காண இயலாத நிலை—கணவனுல் தான் அழிவதோடு, தன் மக்களும் அழியும் நிலை—இந்த நிலையிலே கணவனேடு கூடி வாழ்வதைவிட 'விவாக ரத்து' கோரிப் பிரிந்து வாழ்வதே சாலச் சிறந்ததன்ருே?

இதைத்தான் தி. மு. க. கூறுகிறது. இக்கொள்கை முழக்கம் வடக்கு நோக்கிப் பரவி இன்று கல்கத்தாவிலேகூட ஒலித்திருக்கிறது. மொழி மாநாட்டிற்குச் சென்ற ஆச்சாரியார் அவர்கள் கருப்பும் சிகப்பும் கலந்த இந்தியத் தேசியப் படத்தை அகில இந்திய மொழி மாநாட்டிலே காட்டினராம்! இந்தி பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தைக் கறுப்பு வர்ணத்தால் குறித்திருந்தாராம். மற்றப் பகுதிகளைச் சிகப்பு வர்ணத்தால் சித்தரித்திருந்தாராம். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை முதன் முதலில் ஆரம்பித்த இயக்கங்களுக்கு நன்றி செலுத்தும் வகையில்தான் அதை அங்ஙனம் அவர் குறித்தார் போலும்!

அல்லது, ஆங்கிலத்தின் ஒளி பரவியுள்ள மற்ற நாடுகளை நோக்கி இந்தியாகிய கருமை இருள் பரவுகிறதென்பதையே அவர் அங்ஙனம் குறித்துள்ளார் போலும்! எப்படியாயினும் கழகக் கொடியைக் கல்கத்தா மாநாட்டிலே உயர்த்திப் பிடித்துள்ளார்!

(சப்புத் தாத்தா மணி அடிக்கிருர்...)

ஏ, தென்னக மங்கையே! உன்னை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்! விவாகரத்து கோரி விடுதலைப் பெறு! இன்றேல் வடிகட்டிய முட்டாளான வடநாட்டுக் கணவனுடன் வாழ்ந்து, உன் மக்களையும்—ஏன், தென்னகக் குடும்பமனைத்தையுமே சேர்த்துச் சீரழித்து விட்டு நீயும் அழிந்துபடுவாய்!

—"இன்பபுரியான்"

விதைத்தது, வெள்ளையன்; ஆனால் காய்த்ததோ 'வெள்ளையன் எதிர்ப்பு'!

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

—இப்படி ஒரு ஆலாபனையோடு கனம் சுப்பிரமணியம் திராவிடர் இயக்கத்தின் கரு ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார்!

முதன் முதலாக 1929-ம் ஆண்டிலே செங்கற்பட்டிலே நடந்த சுயமரியாதை மாநாட்டிலே 'சைமன் கமிஷன் பகிஷ்காரம் நியாயமல்ல'—என்று கருத்து தெரிவிக்கப்பட்டதாம்!

அதன் பிறகு அவர் 1944—ல் இயக்க வரலாற்றிலேயே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய 'அண்ணாதுரை தீர்மானத்தை' எடுத்துக் கொண்டு கேலி பேசியிருக்கிறார்!

'திராவிட நாடு என்ற பெயருடன் சென்னை மாகாணம் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் இல்லாததும் நேரே பிரிட்டிஷ் செகரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி மாகாணமாகப் பிரிக்கப்பட வேண்டும்' என்று அப்போது ஒரு தீர்மானம் நிறைவேறியதல்லவா; கருவாராய்ச்சி செய்த கனவான் அதையும் கிண்டல் செய்திருக்கிறார்!

அதற்கு முன்பு கட்சி அரசாங்கத்தை ஆதரித்து வந்த போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஒரு வாசகம் இருக்கிறதல்லவா—அதையும் நையாண்டி செய்திருக்கிறார், தான் கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறிகிறோமே என்பதை ஒருக் கணமாவது எண்ணிப் பார்க்க மறந்து விட்ட அந்தக் 'கனம்'!

இவ்வளவையும் அவர் குறிப்பிட்டது இரு காரணங்களுக்காக!

ஒன்று—திராவிட முன்னேற்றக்கழகத்தின் தாய் ஸ்தாபனம் ஒரு காலத்தில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தை எதிர்ப்பது; அரசாங்கத்தை ஆதரிப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்திருக்கிறது.

இரண்டு—இப்போது தனித் திராவிட நாடு கேட்கிறவர்கள் அப்போது பிரிட்டிஷ் செகரெட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு தனி மாகாணத்தைத்தான் கேட்டிருக்கிறார்கள்!

—அறிவாற்றல் படைத்த நிதியமைச்சர் அரும்பாடுபட்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த தி. மு. கழகத்தின் 'விதை' இதுதான்!

—இதை அவர் கூறும்போது தான் அவருக்குப் பின்னால் இருந்த நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட கைதூக்கிகள் அனைவரும் கையொலி செய்தார்களாம்! 'வெட்கம்! வெட்கம்!'—என்று கூச்சல் போட்டார்களாம்!

அந்தோ, பரிதாபம்! ஆலமரமாக வளர்ந்திருக்கும் தி. மு. கழகத்தின் விதையைக் கண்டுபிடித்தவர், நம்மால் இன்று பட்ட மரமாகக் காட்சியளிக்கும் காங்கிரசின் விதையைக் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது!

பூரண சுயராஜ்யம் கேட்டார்கள், காங்கிரஸ்காரர்கள்!

'வெள்ளையனே வெளியேறு' என்று கூரையின் மேலேறி நின்று கூக்குரல் எழுப்பினார்கள்!

ஆனால், 1885-ம் ஆண்டிலே காங்கிரஸ் என்று ஓர் அமைப்பைக் கூட்டும்போது அவர்கள் நோக்கம் என்னவாக இருந்தது?

1885—ம் ஆண்டிலே பூனாவிலே கூடுவதாக இருந்து; பிறகு அங்கு காலரா பரவியிருந்ததால் பக்கத்திலேயுள்ள பம்பாயிலே முதன் முதலில் காங்கிரஸ் விதையை ஊன்றினார்களே; அப்போது அவர்களுடைய இலட்சியம் என்ன?

வெள்ளைக்காரனை வெளியேற்றுவதா? இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் வாங்கித் தருவதா?

இல்லவே இல்லை! இந்தியர்களுக்கு உத்யோகம் வாங்கித் தருவது ஒன்றுதான் காங்கிரஸ் விதை வளர்ந்து; தருவாகி; மலர்ந்து; காயாகித் தரப்போகும் கனியாகக் கருதப்பட்டது!

அது மட்டுமா?

முதல் காங்கிரஸ் மாநாட்டிலே என்னென்ன தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன? உப்பு சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்றா? அன்னியத் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றா? ஆங்கிலேயன் உடனடியாக வெளியேற வேண்டுமென்றா?

—இதைப் பற்றிய பேச்சே முதல் காங்கிரஸ் நிறைவேற்றிய ஒன்பது தீர்மானங்களிலும் காணோம்!

முதல் தீர்மானம் நிர்வாகம் நல்ல முறையிலே இயங்குவதை ஆராய ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று அன்னிய வெள்ளைக்கார அரசாங்கத்தை விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறது!

எடுத்த எடுப்பிலேயே சுப்பிரமணியம் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் 'கதர் உடுப்போம்' என்று துந்துபி முழக்கம் செய்யவில்லை!

கேவலம், வெள்ளைக்காரர்களுக்குப் போட்டியாக உத்தியோகம் வகிப்பதும்; எப்படியும் அவர்களது கடைக்கண் பார்வையைப் பெற வேண்டும்—என்பதும்தான் காங்கிரஸ் வித்து ஊன்றப்பட்டதன் நோக்கம்!

கனம் சுப்பிரமணியம் அவர்களே! அப்போதே (அதாவது 1944-வது ஆண்டிலேயே) தனி சுதந்திரத் திராவிடநாடு ஏன் கேட்கவில்லை என்று கேலி பேசும் குறும்பு மனிதரே! நீங்கள் மட்டும் 1885-ம் ஆண்டு பம்பாயில் கூடியபோதே இந்தியாவை இந்தியர்களின் கையில் ஒப்புவித்துவிட்டு வெள்ளைக்காரன் வெளியேற வேண்டும்—என்றா தீர்மானம் போட்டீர்கள்?

அன்று பம்பாய் கோகுல் தாஸ் டெஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில் கூடியிருந்த அத்தனை பேரும் காங்கிரஸ் பிற்காலத்தில் ஒரு விடுதலை இயக்கமாக மாறும்—என்று கனவு கூட கண்டிருக்க மாட்டார்களே!

தி. மு. கழகத்தின் தாய் ஸ்தாபனம் அன்னிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததாகப் புகார் கூறுகிறாரே சுப்பிரமணியம்; அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் மட்டும் என்னவாம்?

1885-லிருந்து 1905—வரை காங்கிரஸ் வெள்ளையருக்கு வளைந்து கொடுத்துத் துதிபாடும் தாசானு தாசனாகவே இருந்திருக்கிறது!

1898-லே சென்னைக் காங்கிரசிற்குத் தலைமை வகித்த ஆனந்த மோகன் போஸ் கூறியிருக்கிறார்: "படித்த [illegible]ப்பினர் இங்கிலாந்தின் எதி[illegible] அல்ல; நண்பர்கள் — அதன் முன்னுளிருக்கும் பணிகளில் உதவக்கூடிய இயற்கையான—தேவையான சகாக்கள்!"

—வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தூக்கு மேடையேறிய பகவத்சிங்குகள் வாழ்ந்த நாட்டிலே தங்களை வெள்ளைக்காரர்களின் சகாக்கள் என்று கூறிக் கொண்டு காங்கிரஸ் மாநாட்டின் தலைமைப் பிரசங்கம் நிகழ்த்திய ஆனந்த மோகன் போஸ்களும் இருக்கத்தான் செய்திருக்கிறார்கள்! அந்த அளவுக்கு அந்தக் காலத்தில் காங்கிரஸ் பிற்போக்கு ஸ்தாபனமாக இருக்கத்தான் செய்திருக்கிறது!

—பாவம்; அதையெல்லாம் மறந்து விட்டுத்தான் தி. மு. கழகத்தின் முன்னோர்கள் அன்னிய அரசாங்கத்தை ஆதரித்ததாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்!

அதுமட்டுமா?

கனம்சுப்பிரமணியம்பெருமையடித்துக் கொள்கிறாரே; அந்தக் காரசாரமான காங்கிரஸ் விதையை ஊன்றியது யார்?

ஹியூம்—என்கிற வெள்ளைக்காரர்தான்!

முதல் காங்கிரஸ் மாநாட்டிலே முழங்கிய முழக்கம் யாருடையது?

'காரட்'டைப்போல் சிவந்த ஹியூமுடைய வாய்தான்!

—அவருக்குக்கூட காங்கிரசை ஓர் அரசியல் ஸ்தாபனமாக அமைக்கும் நோக்கம் கிடையாது; சமுதாயப் பிரச்சினைகளை ஆராய்வதற்குத்தான் அவர் பம்பாயிலேயே மாநாடு கூட்டினார்!

அதன் பிறகுதான் அதன் திசை மாறியது!

அப்போது வைசிராயாக இருந்த டப்ரின் பிரபு இங்கிலாந்தில் எதிர்க்கட்சி இருப்பதைப் போல இங்கும் பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கு ஒருகட்சி தேவை—அதனால் ஆண்டு தோறும் கூடி; தீர்மானங்களை நிறைவேற்றும் காங்கிரசிற்கு அரசியல் வர்ணம் பூசுவதற்குச் சிபார்சு செய்தார்!

—ஆக முழுக்க முழுக்க காங்கிரஸ் பிறந்ததற்கும்; அரசியலிலே அடியெடுத்து வைத்ததற்கும் ஆதி காரணமாய் இருந்தவர்கள் இரு வெள்ளைக்காரர்கள்!

இப்படியெல்லாம் தோன்றிய காங்கிரஸ் எப்படியெல்லாம் வெள்ளைக்காரனின் உள்ளங்காலை நக்கி வாழ்ந்திருக்கிறது என்பதற்கு அதன் வரலாற்றிலே ஏராளமான சான்றுகள் இருக்கின்றன!

வெள்ளைக் கவர்னர்களுக்குப் பழைய காங்கிரஸ்காரர்கள் குலாமாக இருந்திருக்கிறார்கள்! அதனால்தான் 1908-ம் ஆண்டில் சென்னைக் காங்கிரஸ் அப்போது கவர்னராக இருந்த சர் ஆர்தர் லாலியின் கூடாரத்தைக் கடன் வாங்கி; அதிலே தனது மாநாட்டை நடத்தியது!

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களை வெள்ளைக்காரனின் பூட்ஸ் நக்கிகள் என்று கேலி செய்கிறார்களே; அதைவிட மோசமா[illegible]

[தொடர்ச்சி பக்கம்—1[illegible]

சென்னை வழக்கு நிதிக்காக

22-3-58 சனி மாலை 6 மணிக்கு
சென்னை ஒற்றவாடை கொட்டகையில்
அறிஞர் அண்ணா முன்னிலையிலும்
நாவலர் நெடுஞ்செழியன் தலைமையிலும்
மு. கருணாநிதி நடிக்கும்
(புதுமை நாடக மன்றத்தாரின்)

உதய சூரியன்

நாடகம்

தோழர்கள் எம். என். கிருஷ்ணன், எஸ். ஆர். கோபால், இராமகிருஷ்ணன், இராமையா, எஸ். ஏ. ஜி. சாமி, சேயராமன், தோழியர்கள் ஆர். எம். மனோரமா, சீதாலட்சுமி, கலாவதி ஆகியோர் நடிக்கின்றனர்.

நன்கொடை:— ரூ. 5, 3, 2, 1.

[illegible] க.

இலட்சத்தை...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

இலவசமாக 'சப்ளை' செய்தார்களாம்!

ஆனால் எட்டு ஆண்டுகள் ஓடி விட்டன; இதுவரை அசலும் கிடைக்கவில்லை; வட்டியும் கிடைத்தபாடில்லை!

○○○ உத்தரப்பிரதேசத்து சர்க்கரை ஆலை முதலாளிகள் தான் காங்கிரஸ் கட்சியின் போஷகர்கள்! அவர்களிடமிருந்து லட்சக் கணக்கில் உதவி பெற்று விட்டு; அவர்களுக்கு திருப்பிக் கைம்மாறு செய்யாமலிருப்பது பாபமல்லவா?

அதனால் இதர மாநிலங்களில் வழங்கும் விலையை விடக் குறைவாக உற்பத்தியாளருக்கு கரும்பு விலையை மணுவுக்கு ரூ. 1—50 ஆக நிர்ணயித்திருக்கிறார்கள்!

இந்தக் குறைந்த விலை காரணமாக சர்க்கரை முதலாளிகளுக்குப் போய்ச் சேரும் கொள்ளை லாபம் எவ்வளவு தெரியுமா?

சுமார் பதினெட்டு கோடி ரூபாய்கள்!

○○○ லைசென்ஸ் வாங்குவதற்கு முன்பாகவே அரசாங்கத்தினிடமிருந்து கடனுதவி பெறும் வேடிக்கையைபபற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

உ. பி. யில் இது மிகவும் சர்வ சாதாரணமான விஷயம்!

'தனசில் விஷ்ட் அன் சன்ஸ்' என்னும் கம்பெனியாருக்குச் சர்க்கரை ஆலை துவங்குவதற்காக ரூ. 40 லட்சம் கடன் வழங்கப்பட்டது!

எப்போது?

அந்தக் கம்பெனியார் 'லைசென்ஸ்' பெறுவதற்கு முன்பாகவே!

○○○ இதைத் தவிர தனிப்பட்ட முதலாளிகள் எவ்வளவு சலுகைகள் தெரியுமா பெற்றிருக்கிறார்கள்?

○○ உதாரணமாக பிர்லா எப்படிப்பட்டவா...?

அவருடைய அலுமினியத் தொழிற்சாலைக்குத்தான் 40 சதவீதம் குறைந்த விலைக்கு அரசாங்கம் மின்சாரம் சப்ளை செய்திருக்கிறதாம்!

அரசாங்கத்திற்குத் தர வேண்டிய பணத்தைத் தராமலிருப்பதற்கும்; தள்ளிப் போடுவதற்குங்கூட வலிமை பெற்றவர்களாயிருக்கிறார்கள், உத்தரப் பிரதேசத்து முதலாளிகள்!

—பணமூட்டைகளுக்குப் பல்லிளித்ததால் காங்கிரஸ் அறுவடை செய்து கொண்டு வரும் பலாபலன்கள், இவை தான்!

இந்திய உபகண்டத்து அரசியலில் பணம் புகுந்தது; பணம் தேர்தலுக்கு நின்றது; பணம் வென்றது; ஜனநாயகம் முக்காடு போட்டுக் கொண்டு வெளியேறியது.

—காங்கிரஸ் தரும் பாடம் இதுவாகத்தான் இருக்கிறது.

"பகுத்தறிவு"

மார்ச் 15-ல் வெளி வர வேண்டிய "பகுத்தறிவு" இதழ், அச்சுப் பொறியில் ஏற்பட்ட பழுது காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. 1—4—58 முதல் வழக்கம்போல் வெளிவரும் என்பதை வாசகர்கள், விற்பனையாளர்கள், இயக்கத் தோழர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
ப. கண்ணன்

அமைச்சருக்கு...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலைக்குச் சென்று ஆங்கிலேயரின் அங்கத்தை யெல்லாம் நக்கி யிருக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்த சுப்பிரமணியத்தின் பாட்டனார்கள்!

— இதை விளக்குவதற்கு காங்கிரசின் வரலாற்றிலிருந்து எத்தனையோ உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும்!

உதாரணமாக ஒன்று:

1914—ம் ஆண்டிலே சென்னையிலே காங்கிரஸ் மாநாடு நடந்து கொண்டிருந்தது. ஏ. பி. பேடரோ என்பவர் இந்திய இராணுவத்தைப் பற்றிக் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் மாநாட்டுப் பந்தலுக்குள் விசேஷ விருந்தாளியாக அப்போது சென்னைக் கவர்னராயிருந்த பெண்ட்லண்ட் பிரபு நுழைந்தார்.

அந்த அன்னிய அதிகாரி உள்ளே நுழைந்ததுதான் தாமதம்; அன்று பந்தலில் கூடியிருந்த அத்தனைத் தேசாபிமானிகளும் அந்த வெள்ளை எஜமானருக்கு மரியாதை தெரிவிக்கும் விதத்திலே எழுந்து நின்றார்கள்! தொடர்ந்து கையொலி செய்து தங்கள் ஆனந்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்!

அதோடு மட்டுமா? இந்திய இராணுவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பேடரோ உட்கார்ந்து கொண்டார்.

நாவன்மை பெற்ற சுரேந்திரநாத் பானர்ஜி மேடைக்கு வந்தார்.

ஏன்?

'வெள்ளையனே வெளியேறு' என்று விண்ணும் மண்ணும் எதிரொலிக்கிற விதத்திலே முழக்கமிடுவதற்கா?

இல்லை!

பின் எதற்கு சுரேந்திரநாத் பானர்ஜி மேடைக்கு வந்தார்?

கவர்னர் துரைக்கு முன்னிலையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக!

அது என்ன தீர்மானம்?

ஜோர்ஜ் மன்னர் வைரத்தலைவைத்துக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் மணி[...]த்திற்கு காங்கிரஸ் என்[...]ன்றும் விசுவாசமாக இருக்கும்—என்கிற தீர்மானம்!

—மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டு; கவர்னர் பிரானைக் காக்காய் பிடிக்க வேண்டுமென்கிற ஒரே காரணத்தினால் விசுவாசத் தீர்மானம் நிறைவேற்றிய குலாம்களின் வாரிசிலே வந்த சுப்பிரமணியம்தான் 'உங்கள் முன்னோர்கள் அன்னியரின் பாதந்தாங்கிகள்' என்கிறார்!

கனம் சுப்பிரமணியம் பெருமையடித்துக் கொள்கிறாரே; அந்தக் காரசாரமான காங்கிரஸ் விதையை ஊன்றியது யார்?

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற வெள்ளையர்!

காங்கிரசை அரசியலில் ஈடுபட வைத்தது யார்?

டப்ரின் பிரபு என்ற வெள்ளை வைசிராய்!

இருந்தும் காந்தியார் 'பெடரல் அமைப்புக் கமிட்டி'யின் முன்னால் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்:

"அது (காங்கிரஸ்) ஒரு ஆங்கிலேயரின் மூளையில்தான் பிறந்தது என்பதைத் தெரிவி[...] கொள்ள நான் மி[...]கிழ்ச்சி அடைகி[...] தெரியும் [...]யன்

[G[...]]

○○○○○○○○○○○○○○○○○○○○○○○○

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

மார்ச்:
15 உத்திரமேரூர்
16 மாலை—சுப்பிரமணியபுரம் (கூட்டம்)
இரவு—குடந்தை (நாடகத் தலைமை)
22 சென்னை—'உதய சூரியன்' நாடகம்
23 திருவண்ணாமலை
26 பல்லாவரம்
30 மன்னார்குடி

ஏப்ரல்:
1 ராம்பாக்கம்
2 3 திருவாடானைத் தொகுதி
5 மாலை—வெள்ளியணை (நீர்ப்பாசன மாநாடு—குளித்தலைத் தொகுதி)
இரவு—சசனத்தம் (கூட்டம்)
6 கோவை

[ஏப்ரல் 10 முதல் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணம்—திருவாரூர் மாநாட்டு வேலைகள்]

○○○○○○○○○○○○○○○○○○○○○○○○

பிறைவானம்...

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

காரோட்டி தங்கத்தை நெருங்கியதும், தங்கத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, மற்றவர்கள் கோவிலுக்குள் நுழைந்து கொண்டிருந்த தர்மகர்த்தாவின் பின்னால் ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

காரோட்டி....எதிரிலே தங்கம்!

புலிக் குகையில் சிக்கிவிட்ட ஆட்டுக்குட்டியாகி நின்று கொண்டிருந்தான், தங்கம்!

'டாண், டான்' என்று கோவில் மணி ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. தர்மகர்த்தா ஜகதாம்பாள் சன்னிதானத்தை அடைந்து விட்டார் என்று அதற்குப் பொருள்!

ஆனால் அந்த மணியோசை எழுப்பிய பேரொலியிலே—தொடர்ந்து எழுந்த எதிரொலியிலே—சிக்கிப் புதைந்து யாருடைய செவிகளிலும் படாமலேயே மறைந்து போய்விட்டது, தங்கம் எழுப்பிய "ஐயோ!" என்ற அலறல்! அது உலக மாதா ஜகதாம்பாளின் செவிகளிலும் விழவில்லை!

தங்கம் என்ன ஆனான்?

அந்தக் கவலையே ஏதும் இல்லாதவராக மேனுக்கு பாவனை செய்து கொண்டு அம்பாளின் எதிரிலே நின்று கொண்டிருந்தார், தர்மகர்த்தா! ஆனால் கரம் கூப்பி அல்ல! ஏன்; அம்பாளின் முன்னால் பக்தன் கும்பிட்டுத் தொழ வேண்டாமா? கும்பிடத்தான் வேண்டும்; கும்பிடவும் செய்வார்; ஆனால் அவரால் கும்பிட முடியாது! ஏன் தெரியுமா? தர்மகர்த்தா ஒரு கரம் இல்லாதவர்! பல ஆண்டுகளுக்கு முன்னால் அவர் ஸ்தல யாத்திரை நடத்திக் கொண்டிருந்தாராம். அப்போது ஏற்பட்ட ரயில் விபத்து ஒன்றில் பலர் உயிர் காணிக்கையே கொடுத்தார்களாம்! ஆனால் தர்மகர்த்தாவின் ஒரு கரத்தை மட்டும் எந்த ஆண்டவனோ பிரியமாகப் பிடுங்கிக் கொண்டார்! அவருக்கு முதலில் கவலைதான், ஜகதாம்பாளைக் கும்பிடக்கூட முடியாமல் போய்விட்டதே என்று! இருந்தாலும், ஜகதாம்பாள் அவருக்குத் தனி 'அருளை'த்தான் கொடுத்திருந்தாள். 'எல்லாம் அம்பாள் கிருபை' என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவதுபோல, அந்தக் 'கிருபை' அவரது குடிகெடுத்த கோரச் செயல்கள் பலவற்றை மூடி மறைத்து முக்கியஸ்தராகவும் ஆக்கிவிட்டது!

அந்தக் கை போனபோதுகூட அவர் அவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டார்; இப்போது அவருக்கு ஏகக் கவலை! ஜகதாம்பாளுக்கு ஏற்பட்டுவிட்ட இழப்பு — மாபெரும் இழப்பு ஒன்றுதான் அவரை அப்படி வாட்டி வதைத்தது!

அம்பாளின் நகைகள் கொள்ளை போய்விட்டன!

அம்பாளும், பக்தர்களின் பால் அபிஷேகம், பாமாலை அபிஷேகம் —இவற்றின் அசதியால் தூங்கிப் போய் விட்டாளோ என்னவோ —திருடன் ஒருவன் பல ஆயிரம் பெறுமான அவளது நகைகளைக் கவர்ந்து சென்று விட்டான்!

நாட்கள் பல உருண்டோடியும் லோக மாதாவின் சொத்துக்கள் கிடைக்கவில்லை!

திருடன் யார்? இந்தக் கேள்வியைப் போலீஸ் இலாக்கா பல முறை கேட்டுக்கேட்டு அலுத்து விட்டது! கிடைத்த ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு அவர்களால் எதுவுமே செய்யமுடியவில்லை. ஒருநாள் நள்ளிரவு கோவிலிலிருந்து மூட்டை ஒன்றைச் சுமந்துகொண்டு ஒரு குள்ள உருவம் ஓடிற்றும்—அந்த உருவத்திற்கு ஒரு கை இல்லையாம்! கோவிலுக்கு எதிரே படுத்துக் கிடந்த ஒரு பையன் இதைப் பார்த்தானும் — இப்படி ஒரு பையன் ஊருக்குள் சொல்லிக் கொண்டு திரிந்தான்! இப்படிச் சொல்லிய தங்கம் 'பைத்தியக்காரன்' என்றுதான் புதிய பட்டம் ஒன்று சூட்டப்பட்டு கேலிப் பொருளானான்!

ஒரு கை இல்லையாமே; யார் அது? போலீசார் தேட ஆரம்பித்த போது தர்மகர்த்தா அவர்களின் முன்வந்து நிற்கவில்லை; சுற்று வட்டாரத்திலே அப்படி யார் இருக்கிறார்கள் என்று தேட ஆரம்பித்து விட்டார்கள்!

எத்தனை நாட்கள் தேடுவது?

"ஜகதாம்பா! லோக மாதா! எத்தனை நாட்கள்தான் நாங்களும் தேடுவது? 'இவன் தான்' என்று 'அவனை'க் காட்டக் கூடாதா? உன் இளகிய மனத்திலிருந்து அந்த உண்மையை எப்படியாவது சொல்லிவிடு தாயே..."

—இன்றைக்கும் ஜகதாம்பாள் சன்னிதானத்திலே நின்று இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தார் தர்மகர்த்தா!

ஆனால் ஜகதாம்பாள் பேசவே இல்லை!

●

கோவிலை விட்டு வெளியே வந்தபோது வாசலில் காரைக் காணோம் தங்கத்தையும் காணோம்! தர்மகர்த்தாவுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. யாருக்கும் தெரியாமல் ஒரு மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டுக் கொண்டார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த கோயில் தலைமைக் குருக்களைப் பார்த்தார், "கணபதி ஐயர்வாள்! நான் ஒரு முடிவு செய்து விட்டேன். அம்பாளின் நகைகள் கிடைக்கா விட்டால் தான் என்ன? அம்பாளின் கிருபையால் எனக்கு எவ்வளவோ செல்வம் குவிந்து கிடக்கிறதே; அதிலிருந்து புதுசா ஒரு 'செட்' நகைகளைச் செய்து காணிக்கை செலுத்தி விடப் போகிறேன்! என்ன சொல்கிறீர்?"

"ஆகா! அதற்கென்ன? பேஷா செய்துடுங்கள்!" என்றார் அவர்.

"ம்...இந்த டிரைவர் எங்கே போய்த் தொலைந்தான்?" என்று சொல்லிக் கொண்டே அவர் திரும்பியபோது கார் 'சரக்'கென்று வந்து நின்றது!

●

தர்மகர்த்தா காரில் நிம்மதி இழந்தவராகப் போய்க் கொண்டிருந்தார்!

"என்ன, ரத்னம்! அந்தப் பயலை...?"—தர்மகர்த்தா பரபரப்புடன் கேட்டுக் கொண்டிருந்த போதே—எப்போதும் அதிகமாகப் பேசாத காரோட்டி ரத்னம் ஏதோ ஒன்றை 'சீட்'டுக்கடியிலிருந்து எடுத்து சாவதானமாகக் காட்டினான்!

அதைப் பார்த்த மறுகணம் தன்னையும் மீறி "ஆ" என்று அலறிவிட்டார் தர்மகர்த்தா கண்ணன்!

என்ன அது?

அது ஒரு வெட்டப்பட்ட கை!

இரத்தம் ஒழுகி உறைந்து கிடந்த கை!

அது யாருடைய கை?

(அடுத்த இதழில் முடியும்)

—சோமனம்

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

பேச மாட்டாயா?

ஜகதாம்பாள் பேசவே இல்லை!

என்ன காரணம்?

காரணம் கேட்டு பதில் கிடைக்கக் கூடிய கேள்வி அல்லவே அது! 'பின் ஏன் இந்த வேதனை?' என்று எத்தனையோ கோடிக் கணக்கான உள்ளங்களில் சிக்கலைக் கிளப்பி விட்டு — சிந்திக்க வைத்து விட்ட மாபெரும் பிரச்சினை!

மணி அடித்தது!

தொடர்ந்து அடித்தது!

தூங்கிக் கொண்டிருந்த ஜகதாம்பாளை எழுப்பவா? அல்லது முடங்கிக் கிடக்கும் அவளது உள்ளுணர்வைத் தட்டி விடவா?

எதற்கோ, மணி அடித்துக் கொண்டேதான் இருந்தது!

ஆனால், அப்போதும் ஜகதாம்பாள் பேசவில்லை; அவள் உதடுகள் ஏனோ மூடியே கிடந்தன! ஏன்?

"நான் என்னம்மா குற்றம் செய்தேன்? என்னை ஏன் இப்படிப் புறக்கணிக்கிறாய்? நானும் தேடித் தேடி அலைகிறேன், அன்பு நெஞ்சம் கொண்டவர்கள் யார் இருக்கிறார்கள் இந்த உலகத்தில் என்று! தமிழ் மாதாவின் கருவிலே புதைந்து கிடக்கும் தங்கமும், மற்ற கனிப் பொருட்களும் இங்கே பயனற்றுப் போகின்றதே — என அரசியல் வாதிகள் வேதனைப் படுவது போல, இங்கே இருக்கிற நல்லவர்கள்கூட எனக்குப் பொல்லாதவர்களாகக் காண்கிறார்களே! போகட்டும் அவர்கள்; நீ கூடவா என்னுடன் பேசக்கூடாது—என் குறைகளைக் கேட்கக்கூடாது— 'கலங்காதே!' என்று ஆறுதல் தரக்கூடாது?

"நான் ஏனம்மா உனக்கு வேண்டாதவனாகி விட்டேன்? நான் உன்னிடம் கொண்டிருக்கும் 'பக்தி'யின் பலத்தை நீ அறியவில்லையா? அப்படியானால் நான் அதை உனக்கு எப்படித்தான் உணர்த்துவேன்? இப்படி கத்திக் கத்தி மாய்வதைத் தவிர வேறு வழி யேதும் எனக்குப் புலப்படவில்லையே, தாயே!

"பக்தர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்; புராணங்களிலே படித்துமிருக்கிறேன் — 'கனவிலே தோன்றுவாள் லோகநாயகி; கனிவுடன் பேசுவாள்; காணிக்கை கேட்பாள்!' என்று! அதை நினைத்து நினைத்து எத்தனை இரவுகள் நான் கனவுக்காகக் காத்திருந்தேன் தெரியுமா?"

தோரணங்கள் அலங்கரிக்க — துந்துபி முழங்க—பக்தர் பட்டாளம் படையணிபோல் தொடர்ந்து வர—திருவிழாபோல் காட்சி அளித்த ஜகதாம்பாள் ஆலயத்தின் முன் நின்று இப்படிக் கத்திக் கொண்டிருந்தான் தங்கம்!

ஆனால், அவன் என்ன கதறி என்ன பயன்? ஜகதாம்பாள் என்னவோ வாய்மூடி மௌனியாகத்தான் நின்று கொண்டிருந்தாள்!

ஆலய மணியோசையின் அலறலிலே—பக்தர் கூட்டத்தின் தோத்திர ஒலியிலே அந்த ஏழைச் சிறுவனின் ஏக்கமும் துக்கமும் கலந்த துயரக் குரல் அந்த அம்பாளின் செவிகளில் விழவில்லையா?

"ஜகத்திற்கெல்லாம் தாய்" என்று பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறாயே; அந்த உலகத்தில் ஒரு ஜீவன்தான் நான்; என்னிடம் மட்டும் ஏன் இந்தப் பாராமுகம்? என் உள்ளக் குமுறலை — கொடியவன் ஒருவனால் குற்றுயிராக ஆக்கப்பட்டுவிட்ட என் வாழ்க்கைக் கதையை கேட்பதற்கு மட்டும் ஏன் உன் செவிகள் மூடிக் கொள்கின்றன?...சொல் ஜகன்மாதா!... சொல்...சொல்...!"

—தங்கத்தின் ஒட்டி உலர்ந்து போன உதடுகள் அசைந்தன. குரல் என்னவோ தொண்டைக் குழியைவிட்டு வெளி வரவில்லை!

"இந்த வருஷம் என் மகன் பரீட்சையிலே பாஸாகிவிட்டால், பத்து தேங்காய் உடைப்பதாக 'வேண்டுதலை' செய்திருக்கிறேன். இனி எனக்கென்ன கவலை? என் மகன் தேறினாற் போலத்தான்!"

"என்னுடைய தீராத தலைவலி இனிமேல் நீங்கிடும்மா! ஜகதாம்பாளுக்கு 'மாவிளக்கு' சாத்துவதாக பிரார்த்தித்துக்கொண்டுவிட்டேன்!"

—இப்படி உலக மாதாவின் பெருமையை — அவளுக்குத் தரப் போகிற காணிக்கையைப் பற்றி பேசிக் கொண்டு சென்ற பக்தர்கள், அந்தப் பரிதாபத்திற்குரியவனின் அலறலை ஏன் கேட்கப் போகிறார்கள்?

தங்கம் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை!

ஆனால் அவன் மட்டுமல்ல; அங்கே குழுமி நிற்பவர்கள் அத்தனை பேரும் அசைந்தாட—அங்குமிங்கும் விலகிச் செல்லும்படியான நிகழ்ச்சி ஒன்று சற்று நேரத்தில் நிகழ்ந்து விட்டது!

"நகழுங்கோ! நகழுங்கோ!......" —கோயில் பிரதம குருக்களின் குரல் எங்கிருந்தோ 'கணீர்' என்று எழும்பியது. அவர் இப்போது தான் தமிழில் பேசுகிறார். அம்பாளின் சந்நிதியிலே சமஸ்கிருத மழை பொழியும் அவரது வாய், தமிழை என்னவோ இப்படித் தான் உச்சரித்தது.

"விலகுங்கோ!......விலகுங்கோ! தர்மகர்த்தா கணபதி வருகிறார்!"

'தர்மகர்த்தா' என்ற சொல் காதில் பட்டதுதான் தாமதம்—கூட்டம் அங்குமிங்கும் அலைக்கழிந்தது. அவருக்கு தனி மரியாதை தருவதாக எண்ணிக் கொண்டு, அம்பாளின் சிலைக்கு எதிரே கும்பிட்டு நின்ற அனைவரது கரங்களும் அவர் வருகின்ற திசையை நோக்கித்தானே திரும்பி விட்டன!

'பள, பள' வென்று மின்னிய புதிய 'பினமத்' கார் ஜகதாம்பாள் ஆலயத்தின் முன்வந்து நின்றது! காரின் கதவு திறக்கப்படுவதற்கு முன்னாலேயே கூட்டம் காரை முற்றுகை யிட்டது.

"அட்டா! கதவைத் திறக்க வழி விடுங்கோ! ஏன் இப்படி செம் மறியாட்டமா மேலே போய் விழறேள்?"

குருக்களய்யா கதவுக்கருகில் நின்று கொண்டு இப்படி குரல் கொடுத்தார்.

காரின் கதவுகள் திறந்தன!

கரிய உருவ பெரிய மனிதரின் முகம் ஒன்று வெளியே தலை நீட்டியது!

"வரவேண்டும்! வரவேண்டும்!" —எங்கிருந்தோ இந்த மகத்தான வரவேற்பு, பல குரல்கள் ஒன்று சேர ஒலித்தது!

ஜகதாம்பாளின் 'சாத்துப்படி'க்காக வந்த செவ்வந்திப்பூ மாலை ஒன்றை கண்ணுக்குப் புலப்படாத அவரது கழுத்திலே போட்டார் குருக்கள்.

"தர்மகர்த்தா கணபதி பிள்ளைக்கு......"

"ஜே!...ஜே!......"

கோயில் சுவற்றிலே மோதி எதிரொலித்தது இந்தக் கூச்சல்!

ஆனால்......

அந்த மலர்ந்த முக வரவேற்புக்கும்—மகத்தான வாழ்த்தொலிக்கும் மத்தியில்...

ஒரு அலறல்......

"ஐயோ!...ஐயோ! ...அவன்தான்! ...அவன்தான்!..."

யார் அவன்? எவனைக் குறித்து அலறுகிறான்?

கூட்டமே கணநேரம் திகைத்து விட்டது. காரிலிருந்து இறங்கிய தர்மகர்த்தாவும் என்னவோ, ஏதோவென்று சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டார். மறுகணம் அவர் தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு, 'எவனோ ஏதோ சொன்னால் நமக்கென்ன வந்தது?' என்ற பாவனையில் கோவில் வாசலை நோக்கி நகர்ந்தார்.

"ஐயோ! கோவிலுக்குள் போகிறானே கொடியவன்! விடாதீர்கள் அவனை! அம்பாள் சந்நிதியிலே அந்த அக்கிரமக்காரனின் விஷமூச்சு படக்கூடாது.......தீர்கள்! விடாதீர்கள்!"

—மறுபடியும் அதே அலறல்!

தர்மகர்த்தாவுக்கு மட்டுமல்ல; அங்கு குழுமியிருந்த அந்தக் கூட்டத்திற்கே ஒன்றும் புரியவில்லை! அப்படியே நிலைகுத்தி நின்றுவிட்டார்கள் சிறிது நேரம்! கத்துவது யார்?

தர்மகர்த்தாவின் கண்கள்—அவரது கூரிய விழிகள் சற்று நேரம் சுற்று முற்றும் ஓடின. கடைசியில் ஓரிடத்தில் அப்படியே நின்று விட்டன. ஆனால் அதே சமயம் அந்தக் கண்களில் திடீரென்று மின் வெட்டுபோல் தோன்றி மறைந்தது ஒரு கலவரம்! அதை யாராவது கண்டுபிடித்துவிட்டார்களோ என்ற சந்தேகம் ஒரு நிமிடம் அவருக்குத் தோன்றியது. உடனே யாரும் கவனித்திருக்க முடியாது என்ற துணிவுடன் தன்னையே சமாளித்துக் கொண்டு விட்டார்!

அவரது பார்வை பட்ட இடத்திலே...

தங்கம்தான் நின்று கொண்டிருந்தான்!

அப்படியானால் இத்தனை நேரம் குரலெழுப்பி அத்தனை பேரையும் திடுக்கிட வைத்தது யார்? தங்கமேதான்!

ஆனால், இப்போது அவனது முகத்திலே அம்பாளிடம் கரம் கூப்பி — 'கேட்கமாட்டாயா என் கதையை!' என்று கெஞ்சிய நேரத்திலே தோன்றிக் கொண்டிருந்ததே; அந்த ஏக்கத்தைக் காணோம்! அந்த வாட்டத்தை விரட்டிவிட்டு — ஒரு கொடியவனைக் கண்டுவிட்ட கோபமும்—அவனைப் பழி வாங்க வேண்டுமென்ற பாவமும்—எங்கிருந்தோ வந்து குடிபுகுந்து கொண்டிருந்தது!

குழிவிழுந்து போயிருந்த அவன் கண்களிலே இரத்தச் சிகப்பு—பசியால், பட்டினியால் தளர்ந்து கிடந்த அவனது உடலிலே தனி உணர்ச்சி!

"ஜகதாம்பாளின் முன்னே அந்த அநியாயக்காரனை அனுப்பாதீர்கள்! பிடியுங்கள் அவனை! பிடியுங்கள் அவனை!..."

—தங்கத்திற்கு எங்கிருந்து அந்த பலம் கிடைத்ததோ தெரியவில்லை; ஓங்காரக் கூச்சலிட்டு அலறினான்!

தர்மகர்த்தாவின் உடல் ஒரு முறை குலுங்கி நின்றது. பக்கத்தில் நடுநடுங்கியபடி நின்று கொண்டிருந்த கோயில் குருக்களை நோக்கி வேகமாகத் திரும்பினார். 'ஐயையே! எனக்கொன்றும் தெரியாதே!' என்றது அவரது பயந்த பார்வையும், படபடத்த உடலும்!

தர்மகர்த்தா மறுபடியும் கோவிலுக்குள் நுழையத் திரும்பினர்.

"போகாதே!.....போகாதே!...." என்று கத்திக் கொண்டே பாய்ந்தான் தங்கம். மறுகணம் சூழ்ந்து நின்ற பெருங் கூட்டம் அவனைப் 'கப்'பென்று பற்றியது. தங்கம் திமிறினான்.

தர்மகர்த்தா, தன் காரின் முன் புறத்திலே அதுவரையில் 'ஸ்டியரிங்'கைப் பிடித்துக்கொண்டே நடந்தவை அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்த காரோட்டியை ஒரு முறை திரும்பிப் பார்த்தார்.

அந்தப் பார்வையிலே பதிந்து கிடந்த பெரும்பொருளை உணர்ந்து கொண்ட அவன் கீழே இறங்கினான். மெதுவாக நடை போட்டு வந்தான். அவனது முரட்டு மீசையும், சீவப்படாமல் கலைந்து கிடந்த தலையும், பெருத்த உருவமும், சிவந்த விழிகளும் 'என் முதலாளியைப் போன்றவர்களுக்கு என்னைப் போன்ற மெய்காப்பாளர்கள்' எப்போதுமே தேவை என்று சொல்லுவதைப்போல இருந்தது. அவன் தங்கத்தை நோக்கி பேசாமல் நடந்தான். தங்கம் தன்னைப் பிடித்து நின்ற முரட்டுக் கரங்களிடமிருந்து விடுதலை பெற துடித்துக் கொண்டிருந்தான். அதற்குள் காரோட்டி அவனை நெருங்கிவிட்டான். அவனது கொடூரத் தோற்றத்தைக் கண்ட தங்கம் விழி பிதுங்க—உடல் நடுங்க அரட்டு நோக்கினான்.

(தொடர்ச்சி பக்கம்—10)

அமைச்சருக்கு...

[10—ம் பக்கத் தொடர்ச்சி]

ஹியூம்தான் காங்கிரசின் தந்தை!"

—இதுதான் காங்கிரசின் கரு ஆராய்ச்சி!

காங்கிரசின் பிறப்பிடம் எது?

ஒரு ஆங்கில மூளை—காந்தியார் கூறுகிறார், இப்படி!

காங்கிரசின் தந்தை யார்?

ஒரு ஆங்கிலேயர்—காந்தியார் கூறுகிறார், இப்படி!

ஆங்கில மூளை என்ற கருப்பையிலே ஒரு ஆங்கிலேயத் தந்தைக்குப் பிறந்ததை மறந்துவிட்டுத்தான் பேசுகிறார் சுப்பிரமணியம், தி. மு. கழகத்தவரின் முன்னோர்கள் அன்னிய அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டினார்கள் என்று!

ஒரு ஆங்கில மூளையிலே—ஒரு ஆங்கிலேயரைத் தந்தையாகக் கொண்டு பிறந்திருந்தும் அந்தக் காங்கிரஸ் காலப் போக்கில் பெற்ற தந்தையர் வர்க்கத்தையே — அதாவது ஆங்கிலேயரையே அடித்துத் துரத்தும் வன்மை பெற்றுவிட்டது!

அதைப் போலவேதான்; நாம் ஜரிகைக் குல்லாய்களிடையே நாம் சிக்கியிருந்தாலும்; மகாராஜாக்களின் தர்பாரிலே உலவ நேரிட்டாலும்; அன்னிய அரசாங்கத்திற்கு ஆதரவு தர வேண்டிய சூழ்நிலைககு ஆளாக்கப்பட்டாலும்; பிரிட்டிஷ் செகரெட்டரி ஆப் ஸ்டேட்டின் நேர் அதிகாரத்தின்கீழ் இயங்கிடும் தனிச் சென்னை மாநிலமே போதுமென்று கூறிடுகிற அளவுக்கு பலவீனர்களாக இருந்தாலும் காலப் போக்கில் மக்கள் மன்றத்திலே ஏறுபோல் நடந்திடும்பேறு பெற்றவர்களாக; ஏழையர் பங்காளராக; அடைந்தே தீருவோம் தனித் திராவிடநாடு என்று போர் முரசம் ஒலித்திடுகிற அளவுக்குப் பலம் பெற்றவர்களாக மாறிவிட்டோம்!

—இந்த நிலை குறித்துத்தான் காந்தியாரைப்போலவே நாமும் மகிழ்ச்சியடைகிறோம்; திராவிட சமுதாயம் தவறானவர்கள் கையிலிருந்து தப்பியதே என்று பெருமைப் படுகிறோம்; பூரிப்படைகிறோம்!

ஆனால் கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு கல்லெறியும் கனம் சுப்பிரமணியமோ உண்மைக்கும் நேர்மைக்கும் பிரியா விடை கொடுத்தனுப்பி விட்டு பேற்றலுரை நிகழ்த்தியிருக்கிறார்!

தாங்கள் வளர்ந்தது எந்த வித்திலிருந்து என்பதை மறந்துவிட்டு, 'ஓ, தி மு கழகத்தோரே! உங்களுடைய முதாதையர்கள் யார் தெரியுமா? டார்வின் கூறுகிறான் கேளுங்கள்: நீங்கள் குரங்கிலிருந்து வந்தவர்கள்; கேவலம் மிருகத்திலிருந்து உதித்தவர்கள்!" என்று ஓங்காரக் கூச்சலிட்டிருக்கிறார்; இதைக்கேட்டு ஒட்டு வேட்டையாடுவதைத் தவிர வேறொன்றும் தெரியாத அவரது எடுபிடிகள் கைதட்டிக் கெக்கலி செய்திருக்கிறார்கள்!

பாவம்; கனம் அவர்கள் டார்வின் சித்தாந்தம் ஒரு சிலருக்குத்தான் பொருந்தும் என்கிற விதத்திலே பேசியிருக்கிறார்! அந்தோ பரிதாபம்—அவரும் அவர்கூட இருக்கும் கைதூக்கிகளும் மறந்துவிட்டார்கள்—அவர்களும் குரங்கிலிருந்து வந்தவர்கள்; அவர்கள் மூதாதையரும் ஒரு மிருகம் தான்!

—இதை நினைவு படுத்திக் கொண்டாவது கனம் சுப்பிரமணியனார் இத்துடன் தனது கரு ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டு; அருகு போல் தழைத்து, ஆல்போல் வளர்ந்திருக்கும் தி. மு. கழகத்தின் வாதங்களுக்கு இனி நேர்மையான முறையில்பதில்சொல்லட்டும் என்று அவரது தந்தையான ஆங்கிலேய ஆலன் அக்டேவியஸ் ஹியூம்மீது ஆணையாகக்கேட்டுக்கொள்கிறோம்! ☘

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தயமுகாடு, சென்னை-6